Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை-29 | 14-12-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -300

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10930) T.P: 024-222 4247



# வான் புலிகள் குறித்த புதிய தகவல்களே

# பாது.அமைச்சின் சீற்றத்திற்குக் காரணமாம்!

## நோர்வேயும் கண்காணிப்புக்குழுவும் தகவல் கூறத்தவறிவிட்டதாகக் கண்டனம்

**வான் புலிகள் விவகாரம் தொடர்பாக சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினர் கொடுத்துள்ள பிந்திய தகவல்களால் நோர்வே மீதும் கண்காணிப்புக்குழு மீதும் சிறிலங்கா அரசு கடும் சீற்றம் கொண்டுள்ளதாகவும் இதன் காரணமாகவே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இனி பறப்புக்களை மேற்கொள்வதில்லை என்று அரசு முடிவெடுத்தது என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

இரணைமடுக்குளத்துக்கு அண்மையில் புலிகளின் விமான ஓடுபாதை அமைக்கப்பட்டு வருவதாக பல காலமாகவே கருத்து வெளியிட்டு வந்த சிறிலங்கா புலனாய்வுப்பிரிவினர் அண்மையில், ஓடுபாதைக்குத் தென்மேற்குப் பக்கமாக விமானங்கள் பாதுகாப்பாக தரிப்பதற்கான விசாலமான கட்டடங்கள் அமைக்கப்படுவதாகவும் - சுமார் 1,250 மீற்றர் நீளமான இந்த விமான ஓடு பாதைக்கு அண்மையில் உள்ள மரங்கள் வெட்டியகற்றப்பட்டு விமானம் வந்து இறங்க வசதியாக மின்விளக்குகள் பொருத்தப் பட்டு அனைத்து வேலைகளும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் தின உரையில் விடுத்த அழைப்புக்கு சூல்ஹெய்மூடாக அரசு பதில் வழங்கும்?

### -இராஜதந்திர வட்டாரங்கள் எதிர்பார்ப்பு

மாவீரர் தின உரையில் பேச்சுக்கு வருமாறு விடுதலைப் புலிகள் விடுத்த அழைப்புக்கு உரிய பதில் எதனையும் நேரடியாக வழங்காமல் இருந்து வரும் சிறிலங்கா அரசாங்கம் நோர்வே தூதுவரூடாக தனது நிலைப்பாட்டை விடுதலைப்புலிகளுக்கு வழங்கும் என எதிர்பார்க்கப்படுவதாக இராஜதந்திர வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இடைக்கால நிர்வாக சபை யோசனைகளின் அடிப்படையிலேயே பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் இடைக்கால நிர்வாக சபை யோசனை தொடர்பில் பேச்சுக்கள் நடத்தப்படும் அதே

(12ஆம் பக்கம் பார்க்க)

## உந்துருளி–தனியார் பேருந்து மோதல்; முகமாலையின் அருகே இருவர் பலி!

யாழ்.முகமாலைப் பகுதியில் வாகன விபத்தில் நேற்று இருவர் உயிரிழந்துள்ளனர் கிளிநொச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த உந்துருளியொன்றும் முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியிலிருந்து யாழ். நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பயணிகள் பேருந்தொன்றுமே முகமாலைப்பகுதியில் மோதி விபத்திற்கு உள்ளாகின.

மாலை 5.30 மணியளவினில் இடம்பெற்ற இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளினில் பயணித்துக்கொண்டிருந்தஇருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர். நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த நாரயணசாமி இராதாகிருஷ்ணன் (வயது 39) மற்றும் யாழ்ப்பாணம் தெல்லிப்பளையினைச் சேர்ந்த சாம்பசிவம் ராகுலதரன் (வயது 26) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களென அடையாளங்காணப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டுப்பற்றாளர் சொக்கனுக்கு பெருமளவானோர் இறுதி அஞ்சலி

நாட்டுப்பற்றாளர் கலாநிதி க.சொக்கனின் புகழுடல் நேற்றுப் பிற்பகல் 4.00 மணியளவில் செம்மணி மயானத்தினில்தீயுடன் சங்கமமானது. தமிழீழ விடுதலைப் புலிகளால் நாட்டுப்பற்றாளராகக் கௌரவிக்கப்பட்ட கலாநிதி க.சொக்கனின் பூதவுடல் புலிக்கொடியினால் மூடப்பட்டு ஊர்வலமாக மயானத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டது. நல்லூரிலுள்ள அவரது வாசஸ்தலத்திலிருந்து கொட்டும் மழையினையும் பொருட்படுத்தாது போராளிகள், புத்திஜீவிகள், எழுத்தாளர்கள் மற்றும் பொது மக்கள் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மீள் குடியமர்வு கொடுப்பனவு கோரி வரணி மக்கள் யாழ்.செயலகமுன் மறியல்

மீளக்குடியமர்ந்த குடும்பங்களிற்கென ஏற்கனவே அரசால் உறுதி வழங்கப் பட்டவாறான மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகள் சீராக வழங்கப்படாமையால் மீண்டும் யாழ்.செயலகம் நேற்றுக் காலை வேளை முடக்கப்பட்டது. தென்மராட்சியின் வரணிப்பிரதேசமக்களால் மீண்டும் மேற் கொள்ளப்பட்ட திடீர் மறியல் போராட்டத்தினாலேயே யாழ். செயலகத்தின் பணிகள் ஸ்தம்பித்தன.

காலைவேளையில் வரணிப் பகுதியிலிருந்து வாகனங்கள் மூலம் வந்த ஆண்களும், பெண்களுமாக நூற்றுக்கணக்கானோர் பிரதான வாயிலை மூடி மறியலில் ஈடுபட்டனர்.செயலக அதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து நாட்டுக் கப்பல் திருமலையில் கரையொதுங்கியது

"ஸ்பிரிட் ஓ.ஃ.ப் ஜாவா" என்ற பெயருடைய தாய்லாந்து நாட்டுச் சரக்குக் கப்பல் இயந்திரக்கோளாறு காரணமாக திருகோணமலை கடலில் கெவுளி முனை அருகில் தத்தளித்து கரையொதுங்கியது.

திருகோணமலைத் துறைமுகத்தில் சீமெந்து உற்பத்திக்குத் தேவையான கிளிங்கர்கற்களை இறக்கிய பின்னர் திரும்பிச் சென்ற போதே கப்பலில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டதாகக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. சுமார் 500அடி நீளமான இக்கப்பலுக்கு கடற்படையினர் பாதுகாப்பு வழங்கியுள்ளனர். கப்பலி லிருந்தமாலுமிகள் கரையிறக்கப்பட்டனர். (25)

## வன்னி எங்கும் பெரும் மழை கொட்டியது வெள்ளத்தினால் பெரும் அனர்த்தம்

### - வீடுகள்,கடைகள், அலுவலகங்களுக்குள் வெள்ளம் புகுந்தது

வன்னிப் பகுதிகள் எங்கினும் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக மக்கள் பெரும் இடர்பாடுகளைச் சந்தித்துள்ளனர்.

நேற்று அதிகாலையில் இருந்து இடைவிடாது பெய்து வரும் பெருமழை காரணமாக மக்கள் பெரும் அனர்த்தத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். மக்களின் குடியிருப்புகளில் மழை வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் தாழ் நிலங்களில் உள்ள மக்களின் குடியிருப்புக்களின் சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளது. இதனால் மக்கள் அருகில் உள்ள ஆலயங்களிலும் பாடசாலைகளிலும், பொதுக் கட்டடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். சில இடங்களில் பாடசாலைகளிலும், பொதுக்கட்டடங்களிலும் மழைவெள்ளம் புகுந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் நிலைமைகள் மேலும் மோசமடைந்திருக்கிறது.

இதேவேளை வன்னிப்பகுதியின் ஏ-9 வீதி, சிறு வீதிகள் உட்பட அனைத்து வீதிகளையும் வெள்ளம் குறுக்கறுத்துப் பாய்கிறது. ஏ-9 வீதியில் முகமாலை,பளை,இயக்கச்சி, ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி, 55 ஆம் கட்டை உட்பட 10 இற்கும் அதிகமான இடங்களில் மழை வெள்ளம் வீதியைக் குறுக்கறுத்துப் பாய்கிறது. அத்துடன் குடியிருப்புப் பகுதிகளுக்குச் செல்கின்ற அனைத்து வீதிகளும், மதகுகளும் வெள்ளத்தால் நிரம்பி வழிகிறது. சில வீதிகள் வெள்ளத்தால் அரித்துச்செல்லப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று ஆரம்பமான க.பொ.த சாதாரணபரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பெரும் சிரமங்களின் மத்தியில் பரீட்

(12ஆம் பக்கம் பார்க்க)



கிளி ருத்துவமனை விடுதி



கிளி.மத்திய கல்லூரி முன்பாக ஏ-9வீதி



படங்கள் - அ.லோகீசன் வீ.பிரதீபன்

கிளிநொச்சியில் நேற்று அதிகாலைமுதல் பகல்முழுவதும் பெய்த தொடர்மழையினால் கிளி.மருத்துவமனை விடுதி, வர்த்தக நிலையம் என்பவற்றுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதையும் வீதிகள், நகரப்பகுதி,ஒழுங்கைகள் அனைத்தும் வெள்ள க்காடாகஉள்ளமையையும் படங்களில் காணலாம்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்

### முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள்-2004

### முகாமைத்துவ கற்கைகள் வர்த்தகபீடம்

13.12.2004 இல் தடைப்பட்ட பரீட்சைகள் பின்வரும் அட்டவணையின் படி 17.12.2004 இல் இருந்து தொடர்ந்து நடைபெறும்.

13.12.2004 ஆம் திகதிய பரீட்சை 17.12.2004 இலும்

14.12.2004 ஆம் திகதிய பரீட்சை 18.12.2004 இலும்

16.12.2004 ஆம் திகதிய பரீட்சை 19.12.2004 இலும்

17.12.2004 ஆம் திகதிய பரீட்சை 20.12.2004 இலும்

20.12.2004 ஆம் திகதிய பரீட்சை 21.12.2004 இலும்

21.12.2004 ஆம் திகதிய பரீட்சை 22.12.2004 இலும் நடைபெறும்.

மாணவர்கள் இவ்வறிவித்தலை அவதானித்து பரீட்சைகளுக்குச் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். துணைவேந்தர்

(சி.11032)

## வரிவிளம்பரம்

### வேழன் பதிப்பகம்

உங்கள் சகல விதமான அச்சக வேலைகளையும் கணினி மூலம் வடிவமைத்து ஓவ்செற்றில் அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள வேழன் பதிப்பகம் கனகபுரம் வீதி. கிளிநொச்சி. (5284)

### தவறிவிட்டது

ப.இளவழுதி கல்விக்கழகம் நடுவப்பணிமனையைச் சேர்ந்தவருடைய கறுப்பு நிறமுடைய பேஸ் முக்கிய ஆவணங்களுடன் 10.12.2004 ஆம் திகதி கிளிநொச்சி கந்தசாமி கோவிலடிக்கும் விசுவமடுவிற்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர் ஈழநாதம் பணிமனை அல்லது கல்விக்கழக நடுவப்பணிமனையில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். ப.இளவழுதி. (5402)

### தவறிவிட்டது

32/2 மூன்றாம் குறுக்குத் தெரு நாவாந்துறை, யாழ்ப்பாணத்தை நிரந்தர முகவரியாகவும் படகுதுறை இலுப்பக்கடவை மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை நேசநாயகம் என்பவரின் தேசிய அடையாள அட்டை நேற்றுமுன்தினம் (12.12.2004) கிளி/உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (11027)

## புத்தக கண்காட்சியும் விற்பனையும்

எமது நிறுவனத்தால் நவம்பர் 22முதல் 30 வரை நடாத்தப் பட்டுக்கொண்டிருந்த மேற்படி கண்காட்சியும் விற்பனையும் டிசம்பர் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வன்னிவாழ் மக்களும், பொது நிறுவனங்களும் பயன் பெறும் வண்ணம் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட அனைத்து வகையான தமிழ், ஆங்கில புத்தகங்களும் உள்நாட்டு வெளியீடுகளும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். விசேட விலைக் கழிவுகள் வழங்கப்படும்.

சிறிலங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 021-2222573

(5358)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்

### முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள்-2004

### கலைப்பீடம்

13.12.2004 ஆம் திகதியில் இருந்து நடைபெறவிருந்த மேற்படி பரீட்சைகள் 16.12.2004 தொடக்கம் பின்வரும் ஒழுங்கில் நடைபெறும்.

13.12.2004 ஆம் திகதிய பரீட்சை 16.12.2004 இலும்

14.12.2004 ஆம் திகதிய பரீட்சை 17.12.2004 இலும்

16.12.2004 ஆம் திகதிய பரீட்சை 18.12.2004 இலும்

17.12.2004 ஆம் திகதிய பரீட்சை 19.12.2004 இலும் நடைபெறும்.

மாணவர்கள் இவ்வறிவித்தலை அவதானித்துப் பரீட்சைகளுக்குச் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.


யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். துணைவேந்தர்

(சி.11031)


## வீரவணக்கம்

மண் மடியில் 06 - 12 - 1936

மனக் குழியில் 11 - 12 - 2004



கடற்புலி[illegible]
கடற்தொழிலாளர் சங்க சமாசங்களின் மேலாளருமான

### லெப்.கேணல் மறவன் மாஸ்ரர்

(எலியாஸ்பிள்ளை ஸ்ரனிஸ்லோஸ்-தாளையடி -வடமராட்சி கிழக்கு)

விழ்ந்திடாத உறுதியுடனே
விடுதலைக்காய் உழைத்தவரே
விதையாகிப் போனாலும்
வியக்கின்றோம்.உம்பணியை
முதுமை வந்து அழைத்தபோதும்
முடியாது என்று ஒதுங்கிடாமல்
முழுப்பணி செய்தவரே -நாம்
முடிப்போம் உம் இலட்சியத்தை

நாச்சிக்குடா முழங்காவில் வர்த்தக சங்கத்தினர்
கடற்புலிகளின் அரசியல்துறை முழங்காவில்
பூநகரி கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம்
மன்னார் மாவட்ட கடற்தொழிலாளர் ஒன்றியம்.

(5452)

# ஈராக்கிய மக்கள் தொடர்ந்தும் துயருற்றால் ஈராக்கிய ஹிட்லர் உருவாகும் நிலை வரும்

## -ஈராக்கிய சனாதிபதி தெரிவிப்பு

(பாக்தாத்)

**ஈராக்கியப் பிரஜைகள் தொடர்ந்தும் கஷ்டத்திற்குள்ளாகி வருவார்களேயானால் அங்கு ஈராக்கிய ஹிட்லர் ஒருவரை உருவாக்கும் நிலை ஏற்படும் என ஈராக்கிய இடைக்கால சனாதிபதி காஸ்லி அல்ஜவ்வர் தெரிவித்துள்ளார்.**

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சி கவிழ்க் கப்பட்ட பின்னர் ஈராக்கில் தினமும் குண்டு வீச்சுக்கள் மற்றும் ஆட் கடத்தல் நடவடிக்கைகள் நடை பெறுவதால் அங்கு புனரமைப்பு அபிவிருத்தித் திட்டங்கள் ஸ்தம்பித நிலையில் உள்ளன.

இது போன்ற முதலாம் உலக மகா யுத்தத்தின் போது ஜேர்மன் வாசிகள் இவ்வாறான நிலைக்கு உள்ளான போதே அங்கு ஹிட்லர் உருவானார். இடைக்காலத் தலை வர்கள் ஈராக்கில் சீரான முறையில் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள் ளார்.


இதேவேளை, ஈராக் மீது மேற் கொள்ளப்படும் தாக்குதல்கள் குறித்து அயல் நாட்டு அரசாங் கங்கள் மௌனத்தைக் கடைப்பிடிப் பதை விட்டு விட்டு நாட்டை ஸ்திரப் படுத்துவதற்கு ஆக்க பூர்வமான பங்கை ஆற்ற வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

இதேவேளை சதாம் பிடிபட்டு ஓராண்டு நிறைந்தது. ஆனாலும் கிளர்ச்சித் தாக்குதல்கள் ஓய்ந்த பாடில்லை என கருத்துத் தெரிவிக் கப்பட்டுள்ளது. நேற்று பாக்தாத் தின் மையப்பகுதியில் அமெரிக்க, பிரிட்டிஷ் தூதரகங்கள் மற்றும் அர சாங்கக் கட்டடங்கள் அடங்கிய உயர்பாதுகாப்பு வலயத்தின் நுழை வாயிற் பகுதியில் நடை பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் குறைந்தபட்சம் ஏழு ஈராக் கியர்கள் கொல்லப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து உயர் பாதுகாப்பு வலயத்தின் உள்ளே மோட்டர் தாக்குதல் நடைபெற்றது. பாக்தாத்தின் மத்தியபகுதியில் தீவிரவாதிகளுக்கும் படைகளுக்கு மிடையே மோதல் நடைபெற்றது.

சதாம் ஹீனசன் அவர்களை ஆட்சியில் இருந்து நீக்கிய பின் முந்தைய ஈராக்கிய படைக்கட்ட மைப்பை அமெரிக்காவும் பிரிட்ட னும் முற்றிலுமாகக் கலைத்தது பெரும் தவறு என இடைக்கால ஈராக்கிய அதிபர் காஸ்லி அல் யாவர் தெரிவித்திருக்கிறார்.

முந்தைய ஈராக்கிய படைகளில் இருந்த பலர் மீது குறை சொல்ல முடியாது. அவர்களை வலுக்கட்டா யமாக இராணுவத்தை விட்டு அனுப்பியதன்மூலம்ஏற்பட்ட வெற் றிடத்தை நிரப்புவது கடினமாயி ருக்கிறது. என்று அல் யாவர் பி.பி. சி.க்கு அளித்த செவ்வியொன் றில் தெரிவித்திருக்கிறார்.



பாக்தாக் உயர்பாதுகாப்புப் பகுதிச் சோதனைச் சாவடியில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பின்பின்னர் ஏற்பட்ட புகைமண்டலம் இக்குண்டு வெடிப்பில் 13பேர் கொல்லப்பட்டுள்ளார்.

# ஈராக் மொசூல் நகரில் அமெ.விமானம் குண்டுவீச்சு

ஈராக்கில் மொசூல் நகரில் உள்ள ஈராக்கிய தீவிரவாதிகளின் ஆயுதக்கிடங்கொன்றை அழிக்கும் முயற்சியாக அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்கு தல் நடத்தியுள்ளன.

இப்பகுதியில் ஆயுதக்கிடங் கொன்று இருப்பதாக தகவல் கிடைத்தமையையடுத்து அமெரிக்க ரோந்து படைகள் அப்பகுதியைச் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தின. எனினும் தீவிரவாதிகளின் எதிர்த் தாக்குதலையடுத்து அமெரிக்க போர் விமானம் ஒன்று அப்பகுதி யில் 250 கிலோ குண்டொன்றை வீசியது. இதில் ஆயுதக்கிடங்கு அழிக்கப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

இத்தாக்குதலில் தீவிரவாதிகள் பலர் கொல்லப்பட்டதாக அறிவிக் கப்பட்டிருக்கிறது. அத்துடன் 9 அமெரிக்க இராணுவத்தினரும் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை ஈராக்கில் மற்றொரு பகுதியில் இடம் பெற்ற தாக்குதலில் 30 பொலிஸ் உயர திகாரிகள் உட்பட 10 பொலிஸார் கொல்லப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

# ருமேனிய அதிபர் தேர்தலில் எதிர்கட்சி வேட்பாளர் வெற்றி



ருமேனிய அதிபர் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார். தற்போதைய பிர தமர் அத்ரியான் நஸ்டாஸே தோல்வியை ஒப்புக்கொண்டி ருக் கிறார். நாட்டில் ஊழலை ஒழிப்ப தும் ஏற்கனவே திட்டமிட்டபடி 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் ருமேனியாவை ஐரோப்பிய ஒன் றியத்தில் இணைப்பதை உறுதி செய்வதுமே தனக்குள்ள தலையாயப் பணிகள் என தலைநகர் புகாரெஸ்ட்டின் தற்போதைய மேயராகவும் விளங்கும் பாசஸ்கு தெரிவித்துள்ளார்.

ஆனால்,இதற்காக ஐரோப்பிய ஒன்றியத்துடன் முன்னர் ஏற்பட்ட சில உடன்படிக்கைகளை மறுவிவாதத்திற்குட்படுத்த தான் அழுத்தம் தருவதாகவும் குறிப்பாக இரும்பு மற்றும் மின்சார துறைகளில் மானி யத்தை குறைப்பதில் சற்று தாமதத்தை ஏற்படுத்த தான் ஆதரவளிப் பதாகவும் அவர் கூறினார்.

# ஈராக் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டோர் கொல்லப்படும் காட்சிகொண்ட சி.டி. கள்

## – கம்போடியாவில் விற்பனை

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டமை மற்றும் கடும் சித்திரவதை செய்யப் பட்டமை தொடர்பான வீடியோ நாடாக்கள் மற்றும் சி.டிகளைக் கைப்பற்றுமாறு கம்போடிய அர சாங்கம் உத்தரவிட்டுள்ளது.

பௌத்த நாடான கம்போடியா வில் முஸ்லிம்கள் ஒருசில குடும் பங்களே வாழும் பகுதியில் பாரிய அளவில் இவ்வாறான வீடியோ கசெட்டுக்கள் மற்றும் சி.டி.கள்இருப்பது குறித்து பொலி சார் ஆச்சரியம் தெரிவித்துள்ள னர்.

இந்த வீடியோக்களில் இரண் டாயிரத்து இரண்டாம் ஆண்டு கைது செய்யப்பட்ட அமெரிக் கப்பத்திரிகையாளர் டேனியல்பேள் பாகிஸ்தானில் கொலை செய்யப் பட்டமையைக் காட்டும் வீடி யோவும் இதில் அடங்கியுள்ளது.

இது போன்ற நூற்றுக்கணக் கான சி.டிக்கள் அங்கு விற்பனை செய்யப்படுவதாகவும் இவை எங்கிருந்து கொண்டுவரப்பட்டன என இதனை விற்பனை செய்ப வர்களிடம் கேட்டபோது இவை கம்போடிய இளைஞர்களால் தமக்கு விற்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

# வறுமையில் வாடும் மக்களுக்கு உதவ சீனாவிடம் உலக உணவுத்திட்டம் கோரல்

கடந்த நூற்றாண்டில் மில்லியன் கணக்கான சீனர்களுக்கு உணவு வழங்க உதவி செய்து வந்த ஐக் கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்டம் தற்போது உலகின் கொடையாளிகளில் ஒருவராகப் பங்களிப்புச் செய்யுமாறு சீனாவை கோரியுள்ளது. இந்த அமைப்பு அடுத்த ஆண்டில் தனது திட்டத்தில் மாற்றங்களை கொண்டு வரத் திட்ட மிட்டுள்ளது.

சீனா தனது சொந்தப் பிரச் சினைகளை கையாள்வதற்கான தகைமையை வளர்த்துள்ளது மாத்திரமின்றி ஏழை நாடுகளுக்கு உதவுவதற்கான அனுபவம், மூளை-பலம் மற்றும் வளங்களை தாராளமாகக் கொண்டுள்ளதாக உலக உணவுத் திட்டத்தின் நிறை வேற்று இயக்குனர் ஜேம்ஸ் மொரிஸ் கூறியுள்ளார்.

இருந்த போதிலும் சீனாவுக்குள் வளர்ச்சி நிலையில் காணப்படும் சமச்சீரற்ற தன்மை காரணமாக நிலைமை மிகவும் குழப்பமானதாக காணப்படுவதாகவும் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்க ளின் அளவு கடந்த ஆண்டில் உண்மையில் வளர்ச்சி அடைந் துள்ளதாகவும் அதிகாரபூர்வ அறிக் கைகள் கூறுகின்றன.

# ஜப்பான் - தென்கொரியா ஆயுதக் கடத்தல் தடுப்பு ஒப்பந்தம்


ஜப்பானுக்கும் தென்கொரியாவிற்கும் இடையில் நேற்று ஒப்பந்தம் ஒன்று கைச்சாத் திடப்பட்டுள்ளது.

இவ் விருநாடுகளும் ஆயுதம் மற்றும் போதைவஸ்த்து கடத்தப்படுவதை தடுப்பதற்காக இரு நாட்டு சுங்கப்பிரிவினருக்கும் பரஸ்பர உதவிகளை வழங்குவது மற்றும் புலமைச்சொத்துரிமையை மீறாமல் இருப்பது போன்றன இந்த உடன்படிக்கையில் அடங்கியுள்ளன.

இந்த உடன்படிக்கை உடனடியாக அமுலுக்கு வருகின்றதென ஜப்பானிய நிதியமைச்சர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை மீறல்கள் ஏற்படும் பட்சத்தில் இருநாடுகளுக் குமிடையில் தகவல் பரிமாற்றத்தை ஏற்படுத்த இந்த உடன்படிக்கை வழிவகுக்குமெனவும் கூறப்படுகிறது.

ஜப்பான் ஏற்கனவே அமெரிக்கா,சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, நியூஸ்லாந்து ஆகிய நாடுகளுடன் இத்தகைய உடன்படிக்கையைச் செய்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஈரான் தொழில்நுட்பவியலாளர் ஒருவர் யுரேனியத் தொழிற்சாலை ஒன்றில் கடமையில் ஈடுபடுகின்றார்.

# அமெரிக்காவை அடுத்து பிரான்சிடமும் இராணுவ உதவி கோருகிறது பாக்.

அமெரிக்காவைத் தொடர்ந்து பிரான்சிடமும் ஆயுதங்கள் வழங்குமாறு பாகிஸ்தான் கோரிக்கை விடுத்துள்ளது.

அல்-ஹைதாவைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலையில் பாகிஸ்தான் உள்ளதாகக் கூறி அந்நாட்டுக்கு சமீபத்தில் பல பில்லியன் மதிப்பிலான ஆயுதங்கள் வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது. இதில் பி.3 ஓரியன் உளவு விமானங்கள், நீர்மூழ்கிகளைக் கண்டறிந்து அழிக்கும் விமா னங்கள் ஆகியவையும் அடங்கும். அதேநேரத்தில் இந்தியாவின் எதிர்ப் புக் காரணமாக எப்-16 ரக நவீன போர் விமானங்களை பாகிஸ்தானுக் குத் தர அமெரிக்கா தயக்கம் காட்டி வருகிறது.

இந்நிலையில் பிரான்ஸ் சென்றிருந்த பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப், அந்த நாட்டிடமும் இராணுவ தளவாடங்கள் வாங்கப் பேச்சு நடத்தியுள்ளார். சீனாவுடன் இணைந்து போர் விமானம் தயாரிக்கும் முயற்சியில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளது. இதற்கான தொழில் நுட்ப உதவிகளை பிரான்சிடம் பாகிஸ்தான் அதிபர் கோரியதாகத் தெரிகிறது.

பிரஞ்சு அதிபர் சிராக்கிடம் பேசிய முஷாரப் உலகளவில் இப் போதைய தீவிரவாதத்திற்கு பலஸ்தீனப் பிரச்சினைதான் காரண மாகவுள்ளது. அதைத் தீர்த்தால் தான் தீவிரவாதத்தை ஒடுக்க முடியும். பின்லேடனைப் பிடிப்பதால் மட்டும் தீவிரவாம் ஒடுங்கி விடாதென்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

# அமெ.உள்நாட்டு பாதுகாப்பு செயலராக பதவி ஏற்க பொலிஸ் அதிகாரி மறுப்பு

அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்பு செயலராக தெரிவு செய்யப்பட்ட முன்னாள் நியூ யோர்க் நகர பொலிஸ் அதிகாரி பேர்னாட் கெரிக் அந்த பதவியை ஏற்கப்போவதில்லை என்று அறி வித்துள்ளார்.

செலுத்தப்படாத வரி மற்றும் குடியுரிமை தொடர்பில் கெரிக் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்தே அவர் இந்த பதவியை தான் ஏற்கப் போவதில்லை என்று அறிவித்துள்ளார். இவருடைய முடிவை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ஏற்றுக் கொண்டுள் ளதாக வெள்ளமாளிகை தக வல்கள் தெரிவித்துள்ளன.

2001 ஆம் ஆண்டு செப்ரெம் பர் 11ஆம் திகதி அமெரிக்காவில் நடத்தப்பட்ட தாக்குதல்களை அடுத்து உள்நாட்டு பாதுகாப்பு பிரிவு ஆரம்பிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

# வீட்டு நாய்களைப் பாதுகாப்பாக வளர்த்து கட்டாக்காலி நாய்களை ஒழிக்க உதவுக!

### -தமிழீழ சுகாதார சேவைகள் அழைப்பு

**நாய், பூனை போன்ற வளர்ப்பு பிராணிகளுக்கு மிருகவைத்தியரின் ஆலோசனைப்படி உரிய காலத்தில் தடுப்பு மருந்தேற்றி பாதுகாப்பாக வளர்ப்பதுடன் கட்டாக்காலி நாய்கள் உருவாகுவதைத் தடுக்க உதவு மாறும் தமிழீழ சுகாதார சேவைகள் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இதுதொடர்பாக வெளியிடப் பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மீளக்குடியமரச் செல்லும் மக்கள் விட்டுச்சென்று கொண்டிருக்கும் மற்றும் பராமரிப்பற்ற நாய்களும் கட்டாக்காலி நாய்களாக பொது இடங்கள், கிராமங்கள், வீதிகள் போன்ற இடங்களில் அலைந்து திரிந்து மனிதனுக்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்துவதுடன் வீதி விபத்துக்களை ஏற்படுவதற்கும் வழி வகுக்கின்றன. அத்துடன் சுகாதாரத்திற்கும் குந்தகம் விளைவிக்கின்றன.

வீட்டில் நாய்களை வளர்ப்பவர்கள் உங்களது நாய்களை பக்கத்திலுள்ள மிருக வைத்தியரிடம் காண்பித்துத் தடுப்பு மருந்தேற்றல் வேண்டும். அத்துடன் உங்கள் பகுதி பிரதேசசபையிடம் பதிவு செய்து கழுத்தில் அவர்கள் தரும் கழுத்துப்பட்டியில் இலக்கத் தகட்டையும் அணிவித்து நாயைக் கட்டி அல்லது அடைத்து வளர்ப்பது தான் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் பாதுகாப்பானதாகும்.

வன்னிப்பகுதியில் இன்று வரையும் ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் நாய்க்கடியினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இங்குள்ள வைத்தியசாலைகளில் விசர்நாய்க் கடிக்கு எதிராக ஏற்றும் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்ட போதெல்லாம் யாழ்ப்பாணம், வவுனியா, அனுராதபுரம் என அலைந்து சென்று ஊசி போட்டுள்ளனர்.

விசர் நாய்களினால் கடியுண்ட பலர்பரிதாபகரமாக இறந்துள்ளனர். பல குழந்தைகள் கூட நாய்களால் கடித்து சின்னாபின்னமாக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். வீதிகளிலும், வைத்தியசாலைக்கும்,சந்தைகளுக்கும் செல்லும் முதியவர்கள் உட்பட பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் சில குடும்பத்தலைவர்களை இழந்து பரிதவிக்கும் குடும்பங்களும் உள்ளன. கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் புள்ளி விபரப்படி 2003இல் 583 பேருக்கும், 2004இல் 1072 பேருக்கும் ஏ.ஆர்.வி. ஊசி மருந்து கொடுக்கப் பட்டுள்ளது. 2004 இல் இருவர் இறந்துள்ளனர்.

எனவே வீட்டு நாய், பூனை போன்ற வளர்ப்புப் பிராணிகளுக்கு மிருக வைத்தியரின் ஆலோசனைப் படி உரியகாலத்தில் தடுப்பு மருந் தேற்றி பாதுகாப்பாக வளர்ப்பதுடன் உங்களுக்குத் தேவையற்ற நாய் அதன் குட்டிகளைப் பொது இடங்களில் விட்டு அலையவிடாது இதற்குப் பிரதேசசபையை அணுகவும், கட்டாக்காலி நாய்கள் உருவாவதைத் தடுக்கவும், தற்போது உள்ள கட்டாக்காலி நாய்களை அழிக்கவும் ஒவ்[illegible]வாருவரும் ஒத்துழைப்பு நல்க [illegible]ண்டுமெனத் தயவாக வேண்டுகி[illegible]றாம் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## இரவில் சுற்றுக்காவல்

வட்டக்கச்சிப்பிரதேசத்தில் குற்றத்தடுப்பைத் தவிர்க்கும் நோக்கில் வட்டக்கச்சி காவல் பணிமனையினர் இரவு வேளைகளில் வீதிரோந்து நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் இப்பிரதேசத்தில் குற்றத் தடுப்பைத் தவிர்த்துக் கொள்ளலாம் என காவல் பணிமனைப் பொறுப்பதிகாரிதெரிவித்தார். (12)

## திருகோணமலை நகரில் சீர்திருத்த நடவடிக்கை

(திருமலை)

திருகோணமலை நகரில் வீதிச் சண்டையில் ஈடுபடுபவர்கள் பாலியல் துர்நடத்தையில் ஈடுபடுபவர்கள், வீதிகளில் பெண்களுடன் சேட்டை விடுபவர்கள் மீது விடுதலைப்புலிகளின் சீர்திருத்தக் குழுவினர் நடவடிக் கைகளை எடுத்து வருவதாக மாவட்ட அரசியல் துறையினர் தெரி வித்தனர்.

இவ்வாறான செயல்களில் ஈடுபட்ட சிலர் செவ்வாய்க்கிழமை சீர்திருத்தக் குழுவினரால் பிடிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டனர்.

பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட இருவரும் சீர்திருத்தக் குழுவினரால் பிடிக்கப்பட்டு எச்சரித்து அனுப்பப்பட்டனர் என்று மாவட்ட அரசியல்துறை வட்டாரங்கள் கூறின. (25)

## முல்லை நுண்கலைக்கல்லூரி மார்கழி தமிழிசை அரங்கு

முல்லை நுண்கலைக்கல்லூரியின் மார்கழி மாத "தமிழிசை அரங்கு" புதுக்குடியிருப்பு நுண்கலை அரங்கில் எதிர்வரும் 19ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலைக்கோன் (பணிப்பாளர்- நவம் அறிவுக் கூடம்) கலந்து கொள்வார். கலைநிகழ்வுகளாக நுண்கலை வாய்ப்பாட்டுப்பிரிவு மாணவிகளின் இளையோர் தமிழிசை அரங்கு, கலாவித்தகர் சத்திய மோகனின் பாட்டு மற்றும் சிறப்பு வாத்திய தமிழிசை அரங்கு போன்ற நிகழ்வுகள் நடை பெறவுள்ளன. அத்துடன் நுண்கலைப் பரீட்சையில் அதிவிசேட சித்தி பெற்ற நுண்கலை மாணவர்களுக்கான கௌரவிப்பும், சிறப்பு விருந்தினர் உரையும் இடம் பெறவுள்ளது.

எனவே அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தமிழீழ நுண்கலைக் கல்லூரியினர் தெரிவித்துள்ளனர்.

## பொருட்களை அதிக விலையில் விற்பனைசெய்த வர்த்தக நிலைய உரிமையாளர் மீது நடவடிக்கை

(முல்லை)

முல்லைத்தீவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் விலைக்கட்டுப் பாட்டுப் பிரிவினர் நடாத்திய திடீர் நடவடிக்கையில் மூன்று கடைகளில் வரி அறவிடாத பொருட்களை அதிகவிலைகளில் விற்றவர்கள் மீது தண்டம் அறவிடப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

விலைக்கட்டுப்பாட்டு பிரிவினரால் வடபகுதிக்கு வெளியே இருந்து வரும் பொருட்களில் வரி அறவிடப்படாத பொருட்களை இரு மடங்கில் விற்பனை செய்வதை கண்டுபிடிக்கப்பட்டே தண்டப்பணம் அறவிட்டதுடன் இனி இவ்வாறு விற்பனை செய்யப் பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)

## காணி விசாரணையும் ஆலோசனையும்

(பூநகரி)

இன்று 14 ஆம்திகதி கொல்லக்குறிச்சி கிராம சேவகர் பிரிவிலும் நாளை 15ஆம் திகதி பள்ளிக்குடாகிராம சேகவர் பிரிவிலும் காணி சம்பந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வும் ஆலோசனையும் வழங்கப்படவுள்ளது.

இவ் ஆலோசனைக் கூட்டத்திற்கு காணி அதிகாரியும் பிரதேச செயலாளரும் கலந்து கொள்ளவுள்ளனர். எனவே இதில் கலந்து கொண்டுகாணிசம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காணுமாறு பிரதேசசெயலர் மக்களைக் கேட்டுக்கொள்கின்றார். (34)

*சிசு உதான திட்டத்தின் கீழ்*

## இரு பாடசாலைகள் உட்பட 10 மாணவர்கள் பயனடைவு

(அலுவலக செய்தியாளர்)

மக்கள் வங்கியினால் அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கு சிசுஉதான சாதனையாளர் தேசியவிருது நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாவட்ட ரீதியாக மாணவர்கள் தெரிவு செய்யப் பெற்று நன்கொடை வழங்கப் படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து எம்ரி.வைதேகி மல்லாவி மத்தியகல்லூரி, எம்.ஜெரூம் முல்லைத்தீவு மகாவித்தியாலயம், செல்வி ரி.உஷா முள்ளியவளை வித்தியானந்தாகல்லூரி, கே.விவேகானந்தன் முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயம், ஜே.சுரேஸ்முல்லைத்தீவு கொக்குளாய் அ.த.க.பாடசாலை.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து செல்வி.சி.தாராணி கிளி/ அக்கராயன் மகாவித்தியாலயம், செல்வி துவாரகா கிளி/அக்கராயன் மகாவித்தியாலயம், கே.கோபிநாத் கிளி/இந்துக்கல்லூரி, எம்.சிந்துஜா கிளி/இந்துக்கல்லூரி, தி.நிலூஷினி கிளி/மகாவித்தியாலயம்.

மேற்படி தெரிவு செய்யப் பெற்ற மாணவர்களுக்கு நன்கொடையாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதுடன் இவர்கள் மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவராக இருக்குமிடத்து ரூபா 20 ஆயிரம் வழங்கப்படவுள்ளதெனவும் தெரிவிக்கப் பெற்றுள்ளது. மற்றும் கிளி/ மாவட்டத்தில் கிளி/ அக்கராயன் மகாவித்தியாலயமும், முல்லை. மாவட்டத்தில் கொக்குளாய் அ.த.க. பாடசாலையும் தெரிவு செய்யப் பெற்று மேற்படி இரு பாடசாலைகளுக்கும் தலா ரூபா 50 ஆயிரம் நன்கொடையாக வழங்கப் படவுள்ளது.

இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 29அம் திகதியன்று கொழும்பு பி.எம்.ஐ.சி.எச். கட்டடத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதென மக்கள்வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார். (சோ)

## கிளிநொச்சி நகரில் வடிகால் புனரமைப்பு துரிதகதியில் நடவடிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

வீதிஅபிவிருத்தி அதிகார சபையினரால் கிளிநொச்சி



நகரப்பகுதியில் வடிகால் புனரமைப்பு மற்றும் தற்காலிக வடிகால் அமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன.

தற்போது பெய்துவரும் மழை காரணமாக கிளி நகரப்பகுதிகளில் வெள்ளம் வழிந்தோட முடியாத நிலையில் தேக்கம் கொள்வதுடன் பிரதான வீதிகளை மழை வெள்ளம் குறுக்கறுத்துப் பாய்வதன் காரணமாக வீதிகள் சீர்கெடும் நிலை தோன்றியுள்ளதனையடுத்து கிளி அரச அதிபர் தி.இராசநாயகத்தின் பணிப்புரைக்கமைவாக மேற்படி வடிகால்கள் புனரமைப்பு பணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் தற்போது மேற்கொள்ளப் பெற்றுவருகின்றன.

கடந்த பல வருடகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் மண் மற்றும் கழிவுப் பொருட்களால் நிரப்பப் பட்டிருந்த சகல வடிகால்களும் தற்போது புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றமையின் காரணமாக இப்பகுதிகளில் இது வரைகாலமும் தேக்கமடைந்திருந்த மழை வெள்ளம் வழிந்தோடக் கூடிய ஏது நிலை தோன்றியுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (சோ)

## தரம்-1இல் இணைந்து கொள்ளும் மாணவர்கள் கௌரவிப்பு

(பூநகரி)

கடந்த திங்கட்கிழமை புதிதாக தரம் 1 இல் 2005 இல்சேரும் மாணவருக்கான கௌரவிப்பு முட்கொம்பன் உதயா முன்பள்ளி மாணவர்க்கு பி.ப.2.00மணிக்கு நடாத்தப்பட்டது. மங்கல விளக்கை பிரதேச முன்பள்ளிகளின் தலைவர் தா.கிருஷ்ணசாமி ஏற்ற பொதுச்சுடரை தேசிய எழுச்சிப் பேரவைச் சேர்ந்த அருணாசலம் ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியேற்றல் வைபவம் இடம்பெற்றது. தேசியக் கொடியிணை பூநகரிப் பிரதேச பொறுப்பாளர் ஈகைவேந்தன் ஏற்றினார். தொடர்ந்து சிறார்கள் கௌரவிக்கப் பட்டு கலைநிகழ்வுகள் இடம் பெற்றன. முன்பள்ளி பாடசாலை ஆசிரியரின் நன்றியுரையுடன் நிகழ்வுநிறைவுற்றது. (34)

## மீன் உணவு பதனிடல்,சந்தைப்படுத்தல் பயிற்சி நெறி மன்னாரில் ஆரம்பம்

கடந்த02-12-2004 அன்று மன்னார் மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தினால் ஐ.எஸ்.ஒ. நிறுவன நிதியுதவியுடன் மன்னார் மாவட்ட தேவன்பிட்டியில் இருபது பயனாளிகளுக்கான மீன் உணவு பதனிடல் சந்தைப்படுத்தல் தொடர்பான பயிற்சி வகுப்பு ஒன்று கடந்த 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியானது 15 நாட்களுக்கு நடைபெறுகின்றது. இப்பயிற்சியின் மூலம் இக் கிராமத்தைச் சேர்ந்த பத்து விதவைகளும் 14 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட பத்து பயனாளிகளும் பயன் பெறவுள்ளதோடு இச்செயற்பாடு தொடர் நடவடிக்கையாக மேற்கொள்ளப் படவுள்ளது.

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வு தேவன் பிட்டியில் உள்ள மீனவர் இளைப்பாறு மண்டபத்தில் காலை 11.00 மணியளவில் ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் தலைமையுரையினை நிறுவன மாவட்ட இணைப்பாளர் கி.பிரபாகரன் வழங்கினார். அதனைத் தொடர்ந்து சிறப்புரைகள், கருத்துரைகள் நடைபெற்றன. இதன் பின் தவராசா மீன்பிடி சம்பந்தமான விளக்கத்தையும். இதனைத் தொடர்ந்து நிறுவனத்தின் திட்ட அலுவலர் பிரதாப் மீன்பிடி நடவடிக்கைகளுக்கான பயிற்சிகளின் மேலதிகவிளக்கத்தை அளித்தனர்.

இந்நிகழ்வில் நிறுவன திட்ட இணைப்பாளர் டாக்டர். மனோகரன் மற்றும் கிளி.மாவட்ட இணைப்பாளர் சி .விஜேந்திரா மீனவர் சங்கத்தலைவர் செயலாளர் ஆகியோருடன் பெருமளவிலான மக்களும் கலந்து கொண்டனர். நன்றி உரையுடன் முதல்நாள்நிகழ்வு நிறைவு பெற்றது.

# காணாமல் போனோர் குறித்த விசாரணைக்கு படைத்தரப்பின் ஒத்துழைப்பில்லை

## -விசாரணைகள் நடைபெறுவதில் முட்டுக்கட்டை

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டில் படையினரால் கைதாகிக் காணாமல் போனோர் தொடர்பாக யாழ். உயர்நீதிமன்றத்தில் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுத்தாக்கல்கள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்கு இம்மனுக்களில் பிரதான எதிரிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள படைத்தரப்பினர் இடையூறாக இருந்து வருகின்றனர்.**

1995, 1996 ஆம் ஆண்டுகளில் யாழ்.குடாநாட்டு பகுதிகளில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன உறவுகளின் நிலைமைகளை வெளிப்படுத்தக் கோரும் முகமாக அமைந்துள்ள இம்மனுக்களில் சிறிலங்கா இராணுவத்தளபதி, யாழ்.மாவட்ட படைத்தளபதி கைது செய்யப்பட்ட பகுதிகளுக்குப் பொறுப்பான படைத் தளபதிகள் எனப் பலரும் எதிராளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஆனால் இம்மனுக்கள் தொடர்பான விசாரணைகளின் போது அவர்கள் யாழ். மேல் நீதி மன்றத்தில் ஆஜராகாமல் விடுதல் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக் காமல் விடுதல் போன்ற பல்வேறு விதமான இழுத்தடிப்புக்களையும் மேற்கொள்வதாக மனுதாரர்கள் தரப்பினர் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

# ஊர்காவற்துறை-காரைநகருக்கிடையே பழுதடைந்த பாதைப்படகு சேவையில்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை-காரைநகர் ஆகியபகுதிகளுக்குகிடையேயான பயணிகளின் போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடுத்துவதற்கு புதியபாதை படகு ஒன்று தருவிக்கப்பட்டுள்ளபோதும் அது சேவையில் ஈடுபடுத்தப்படாமல் இருக்க ஏற்கனவே நீண்ட காலமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டதால் சேதமடைந்து காணப்படும் பழைய பாதைப்படகே பயணிகளின் போக்கு வரத்துச் சேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பழுதடைந்த நிலையில் காணப்படும் மேற்படி பழைய பாதைப் படகு சேவையில் ஈடுபடும் போதே நடுக்கடலில் பழுதடைந்து நின்று வருவதுடன் படகின் அருகு மட்டைச் சுவர்களால் கடல் நீர் படகினுள் புகுந்து வருகின்றது.

இதனால் மேற்படி பகுதிகளுக் கிடையான பாதைப் படகுச் சேவை பெரும் அச்சுறுத்தலும், அபாயமும் மிக்கதொன்றாகவே தொடர்ந்தும் காணப்படுவதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

# தென்மராட்சி வலய முன்பள்ளி போட்டி முடிவுகள் வெளியாகின

தென்மராட்சி வலய முன்பள்ளிகளுக்கான வலயமட்டப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. பாட்டு, பேச்சு, நடனம் சித்திரம், நாடகம் ஆகிய போட்டிகளுக்கான முடிவுகளே வெளியிடப்பட்டுள்ளன. அம்முடிவுகள் வருமாறு;

பாட்டு முதலாமிடம், சதானந்தராசா வித்தகன் பாரதி முன்பள்ளி, சாவகச்சேரி,இரண்டாம் இடம்:- வி. கீர்த்திகா சிவமணி முன்பள்ளி-நாவற்குழி,மூன்றாமிடம்:-த.அபிஷாயினி, நாவலர் முன்பள்ளி, அல்லாரை, மீசாலை.

பேச்சு முதலிடம் -யோன்சன் டனிஸ்சா அன்னை திரேசா முன்பள்ளி, கச்சாய் வீதி-கொடிகாமம். இரண்டாமிடம்:- சி. தர்சிகா, சைவப் பிரகாச முன்பள்ளி-வரணி. மூன்றாமிடம்:-பா.கௌசிகா, நாவலர் முன்பள்ளி, அல்லாரை, மீசாலை.

நடனம்:- முதலாமி இடம் ச. நிரோஜா,சிவமணி, முன்பள்ளி, நாவற்குழி. இரண்டாமிடம்:-சி.தர்சிகா,சைவப்பிரகாச முன்பள்ளி வரணி.மூன்றாமிடம்:-ப.கஸ்தூரி, பராசக்தி, முன்பள்ளி, கைதடி.

சித்திரம்:-முதலாமிடம்:-க.பிரசாத்,தென்னிந்திய திருச்சபை முன்பள்ளி சாவகச்சேரி. இரண்டாமிடம்:-த.யசிகரன், வினோபா முன்பள்ளி,கச்சாய்,கொடிகாமம். மூன்றாமிடம்:- பி.ஹம்சியா,நாவலர் முன்பள்ளி,அல்லாரை மீசாலை.

நாடகம்:- முதலாமிடம் ஒற்றுமை தந்த உயர்வு,நாமகள் முன்பள்ளி, சங்கத்தானை சாவகச்சேரி,

இரண்டாமிடம்:-எது உலகம், கலைமகள்-முன்பள்ளி,மட்டுவில்-சாவகச்சேரி. மூன்றாமிடம் ஞானக் குழந்தை கொடிகாமம்-மத்தி முன்பள்ளி,கொடிகாமம்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்கட்கு சேமிப்புப் புத்தகங்கள் பரிசளிப்பு விழாவில் வழங்கப் படவுள்ளதாகவும் பாட்டு,பேச்சு நடனம்,சித்திரம், நாடகம் போன்றவற்றில் முதலாமிடத்தைப்பெற்ற மாணவர்களுக்கு, ரூபா1000 அவர்கள் பெயரில் சேமிப்பில் இடப்படும் என்றும் முன்பள்ளி, உதவிக் கல்விப்பணிப்பாளர் சு. பாக்கியராஜா, அவர்கள் தெரிவித்துள்ளார். (28)

# உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் தொழிலுக்கான உதவி வழங்கல்

(நல்லூர்)

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஈவினை புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள 81 குடும்பங்களுக்கு மூவிமொண்டோ நிறுவனம் தொழிலுக்கான உதவிகளைச் செய்துள்ளது.

ஈவினை கிராம அலுவலர்பிரிவில் 28 குடும்பங்களுக்கு மேசன் தொழிலுக்கான உபகரணங்களும், 33 குடும்பங்களுக்கு கோழிக்கூடும், கோழிக்குஞ்சும் வழங்கப்பட்டுள்ளன.

புன்னாலைக் கட்டுவன் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 11 குடும்பங்களுக்கு கோழிக்கூடும், கோழிக்குஞ்சுகளும் மற்றும் 9 குடும்பங்களுக்கு மேசன்தொழிலுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

கணவன்மாரை இழந்த பெண்களைக் குடும்பத்தலைவிகளாகக் கொண்ட குடும்பங்களுக்கு கோழிவளர்ப்புக்கான உதவிகள் செய்யப்பட்டுள்ளது. (41)

## -யாழ்.நெல்லியடிப்பகுதியில்-

# ரோந்து செல்லும் படையினர் பொதுமக்களை அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நெல்லியடிப் பகுதிகளில் இரவு நேர ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிறிலங்காப் படையினர் வீதிகளில் நடமாடும் அப்பாவிப் பொதுமக்களை அச்சுறுத்தும் செயல்களில் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் இரவு நேரங்களில் பீல்ட்பைக், துவிச்சக்கர வண்டி போன்றவற்றில் ரோந்துப் பணிகளில் கடந்த சில நாட்களாக ஈடுபடத் தொடங்கியுள்ள படையினர் வீதிகளில் பயணிக்கும் அப்பாவிப் பொதுமக்களை வழிமறித்து திடீர்ச்சோதனைகளை மேற்கொள்வதுடன் வீதிகளில் நடமாடக்கூடாது எனவும் மிரட்டி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (33)

## — கிழக்கு பல்கலைக்கழகத்தின் —

# திருகோணமலை வளாகத்தில் வெளிவாரி வகுப்புக்கள்

(திருகோணமலை)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திரு கோணமலை வளாகத்தில் முதலாவது தடவையாக வெளிவாரிப்பட்டதாரி வகுப்புக்கள் 2005 ஆம் ஆண்டு சனவரி 7ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

வெளிவாரிப்பட்டதாரி செயற்றிட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட முதலாவது தொகுதி வெளிவாரி மாணவர்களின் அறிமுகம் மற்றும் அங்குரார்ப்பண நிகழ்வு வெள்ளிக்கிழமை மாலை வளாக மண்டபத்தில் வளாக முதல்வர் வண.பிதா சி.பி.இராஜேந்திரா தலைமையில் நடைபெற்றது. ஆரம்பத்தில் வளாக முதல்வர் பீடாதிபதிகள் வெளிவாரிப்பட்டதாரி மாணவர் சார்பில் அவர்களின் பிரதிநிதிகள் மங்கல விளக்கேற்றினர்.

வளாக முதல்வர் பேசும் போது; தற்போது ஆரம்பிக்கப் பட்டிருக்கும் வெளிவாரிப் பட்டப்படிப்பு நெறியை உள்ளூர் இளைஞர், யுவதிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இச்செயற்றிட்டத்தின் வெற்றி மாணவர்களின் கைகளில் தான் உள்ளது என்று கூறினார். வெளிவாரிப்பட்டப்படிப்பு செயற்றிட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கு நன்கு திறமையான ஆசிரியர் குழாம் உள்ளது. அவர்கள் ஏனைய பல்கலைக் கழகங்களின் போதனாசிரியர்களுக்கு இரண்டாம் பட்சமானவர்கள் அல்லர் என்றும் முதல்வர் குறிப்பிட்டார். வளாகத்தின் முகாமைத்துவம் மற்றும் தொடர்பு சாதனப்பீடத்தின் பீடாதிபதி ரி.பிரபாகரன் பேசும் போது.

வாரத்தில் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் வெளிவாரிப் பட்டப்படிப்பு வகுப்புகள் நடத்தப் படும் என்று கூறினார். வெளிவாரிப்பட்டப்படிப்பு திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராக முகாமைத்துவத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம். கருணாநிதி நியமிக்கப்பட்டிருக்கின்றார். வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு தெரிவு செய்யப் பட்ட அனைத்து விண்ணப் பதாரிகளும் சனவரி 5ஆம் திகதி வகுப்புக்களுக்குச் சமூகமளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார் -தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப் படிப்பின் பின் டிப்ளோமா நெறி திருகோணமலை வளாகத்தில் விரைவில் ஆரம்பிக்கப்பட விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (25)

## வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை

மத்திய மாகாணத்தில் சுமார் 200 பாடசாலைகளில் காணப் படும் அதிபர் வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளன.

மத்திய மாகாண கல்வித்திணைக் களம் இதற்கான நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறது. எதிர் வரும் சனவரி மாதம் முதல் இந்த அதிபர் வெற்றிடங்களை அதிபர் தரம் பெற்ற வலய கல்வி அதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் விசேட தகுதிகளை பெற்றோரைக் கொண்டு நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது. நுவரெலிய மாவட்டத் திலேயே அதிகமான அதிபர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. (32)

# சனநெரிசல் மிகுந்த வீதி பழுதடைந்த நிலையில்

யாழ்.காங்கேசன்துறை வீதியின் யாழ்.நகரை அண்டியுள்ள வைத்தீஸ்வரன் ஆலயமுன்றல் தொடக்கம் மிட்டாஸ்கடைச் சந்திவரையிலான பகுதி மிகமோசமாக சேதமடைந்துள்ளது.

பாரிய குன்றுகுழிகள் நிறைந்ததாக காணப்படும் இவ் வீதியால் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களை அனுபவிப்பதுடன் சன நெரிசல்மிக்க இவ்வீதிப் பகுதிசேதமடைந்திருப்பதால் விபத்து ஏற்படும் அபாயமும் உள்ளது. (33)

# பன்றிகளால் பயிரழிவு

(தென்மராட்சி)

சரசாலைப் பகுதியில் பன்றிகள் தோட்டங்களில் புகுந்து பயிர்களை நாசம் செய்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் கூட்டமாய் புகுந்து பயிர்ப்பாத்திகளை தோண்டி நாசமாக்குவதுடன் மரவள்ளித் தோட்டங்கள், மற்றும் பனம் பாத்திகளை தோண்டி அழித்து பெரும் சேதத்தை ஏற்படுத்தி வரு வதாக இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (28)

# எழுது மட்டுவாள் பகுதியில் இராணுவத்தினர் பயிற்சி

(அலுவலகசெய்தியாளர்)

மிருசுவில் எழுது மட்டுவாள் பிர தேசத்தில் இராணுவத்தினரின் பயிற்சி நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாக பாரியளவில் மேற் கொள்ளப் பெற்று வருவதாகத் தெரிய வந்துள்ளது.

கடந்த சில தினங்களாக மிருசுவில் எழுதுமட்டுவாள் பிரதேசங் களில் உள்ள ஏ-9 வீதியில் பிற்பகல் 5.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை பெருந்தொகையான இராணுவத்தினர் மேற்படி பயிற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் தென்பகுதியிலிருந்து அண்மையில் இராணுவத்தில் சேர்க்கப் பெற்ற இளைஞர்களுக்கே அப் பகுதிகளில் தற்போது இராணுவ பயிற்சிகள் வழங்கப்பெற்று வருவதாகவும் செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது. (சோ)

# கல்வியியற் கல்லூரி மாணவருக்கு சனவரி 19 பட்டமளிப்பு விழா

(கொழும்பு)

இலங்கையில் உள்ள அனைத்து கல்வியல் கல்லூரிகளிலும் இருந்து தமது கல்வியை நிறைவு செய்து 2002 ஆண்டு வெளியேறிய மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் சனவரி மாதம் 19 ஆம் திகதி கொழும்பு பண்டராநாயக்க மண்டபத்தில் இடம் பெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வவுனியா கல்வியற் கல்லூரியில் இருந்து 2002 ஆண்டு கல்வியை நிறைவு செய்து வெளியேறிய 230 மாணவர்களுக்கும் இது தொடர்பாக தனித்தனியாக அறிவிக்கப்பட்டு இருப்பதாகவும் அவ்வாறு கடிதம் கிடைக்காதவர்கள் தம்மிடம் தொடர்பு கொள்ளுமாறு வவுனியா கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி பேனாட் தெரிவித்தார். (32)

# எஸ்.பி.யின் சிறைவாசம்

# சந்திரிகாவின் அரசியல் அஸ்தமனமா?

தனது ஊரில் சிறந்த பாடசாலையொன்றில் கற்றுத் தேர்ந்து கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இணைந்து அங்கு மாணவர் அமைப்பை வழிநடத்திச் சென்ற எஸ்.பி. திஸாநாயக்க என்ற நபர் பண்டாரநாயக்க, சேனநாயக்க, ஜயவர்த்தன போன்றோரின் வினோத அரசியலில் ஒரு வினோத மன்னனாக வந்து ஆட்டிப் படைப்பார் என்று யாரும் நினைத்திருக்க முடியாது. 17 வருடங்களாக எதிர்க்கட்சியாக விருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியை 1994ஆம் ஆண்டு ஆளும் கட்சியாக மாற்றியமைத்ததும், 7 வருடங்களாக எதிர்க்கட்சியாக இருந்த ஐ.தே.கட்சியை ஆளும் கட்சியாக மாற்றியதும் திஸாநாயக்க ஆவார். இவர் பண்டாரநாயக்கவின் சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருக்கும் போது அதன் செயலாளராக பதவி வகித்தார். அதே போன்று ஐ.தே.கட்சியில் இணைந்ததும் ஐ.தே.கட்சியின் கோட்டையான சிறிகோத்தாவிலும் இடம் பிடித்து கட்சியின் தேசிய அமைப்பின் செயலாளர் என்ற புதிய பதவியையும் ஏற்று வகித்தார். இவருக்கு எந்தக்கடசிக்குச் சென்றாலும் சிறப்பான இடம்கிடைக்கும் என யாரும் எண்ணவில்லை. இந்தச் சிறப்பை அவருக்கு யாரும் வழங்கவில்லையாயினும் அவரின் செயலாற்றலின் மூலம் அவர் இவற்றைப் பெற்றுக்கொண்டு அரசியலில் ஒரு பெரும் புள்ளி ஆனார். அவ்வாறு அரசியலில் ஈடுபாடு கொண்ட அவர் சிறைக்குச் செல்ல நினைக்கவில்லை.

எஸ்.பி.திஸாநாயக்க முதன் முதல் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்ததுடன் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்தார். பல்கலைக் கழக மாணவர் அமைப்புத் தலைவராக இருந்தபோதே அவர் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைய ஆர்வம் கொண்டார். 1977ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேர்தலில் நின்றபோது கம்யூனிஸ்ட் கட்சி தனித்தே போட்டியிட்டது. அப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியையோ, ஐக்கிய தேசியக் கட்சியையோ அவர் விரும்பவில்லை. வெறுத்து ஒதுக்கினார். ஆயினும் அப்போதைய தேர்தலில் இவரது கம்யூனிஸ்ட் கட்சி படு தோல்வியைச் சந்தித்தது. அதன் பின்னர் இவரது சிந்தனைகள் மாற்றமடைந்தன.. இவர் அந்தத் தோல்வியைச் சகிக்க முடியாதவராகக் காணப்பட்டார். அதன் பின்னர் ஒரு நாள் அனுராபண்டார நாயக்கவின் தலைமையில் கண்டி மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டமொன்றுக்கு சமுகமளித்த இவருக்கு அனுராவைச்சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அதன்மூலம் அவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்தார். மு[illegible]ர் கம்யூனிஸ்ட் கட்சியில் இ[illegible]ந்து தோல்வியைச் சந்தித்த இவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை எவ்வாறேனும் வெற்றியடைச் செய்வதென பெரும் பாடுபட்டார். (அப்போது ஐ.தே.கட்சி ஆட்சியில் இருந் தமை குறிப்பிடத்தக்கது.) இவர் 1988ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலின் போது உந்துருளியில் சென்று கிராமங்கள் தோறும் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்த போது ஜே.வி.பி.தீவிரவாதி என்ற குற்றச்சாட்டில் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். அவ்வாறு




அவர் முயன்ற போதிலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேர்தலில் தோல்வி அடைந்தது. எனினும் அவரது தொகுதியில் அவர் வெற்றி பெறார் அத்துடன் அவர் மேலும் முயற்சிகளை மேற்கொண்டு கட்சிக்குள் பிரதான இடத்தைப் பிடித்து இடதுசாரிகளை இணைகக்கும் [illegible]டத்திலும [illegible]டுபட்டார். ஆயினும் அனுரா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் திஸாநாயக்க சிறிமாவோவினால் கவரப்பட்டார். எனினும் சிறிமாவோ அரசியலில் தீவிரமாக ஈடுபாடுகாட்ட அவரது உடல்நலம் இடமளிக்காததால் லண்டனில் உள்ள சந்திரிகாவை வரவழைத்து கட்சியை வழி நடத்தினார். அனுரா மூடிய சிறிலங்கா சுதந்திரக்கட்சி கோட்டையின் கதவு சந்திரிகாவால் திறக்கப்பட்டது. திஸாநாயக்க மேலும் மங்கள சமரவீர, ஜெயராஜ் பெர்னாண் டோபுள்ளே ஆகியோருடன் இணைந்து மேல் மாகாண சபைத் தேர்தல் வெற்றிக்கு வழிசமைத்தார். ஆயினும் அன்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தோல்வியுற்றிருப்பின் திஸாநாயக்க வீடு சென்றிருப்பார்.

அந்த வகையில் சந்திரிகா முதலமைச்சரானார். அமைச்சின் பிரதமசெயலாளராக திஸாநாயக்கவின் மனைவி நியமிக்கப்பட்டார். அன்று திஸாநாயக்க பிடித்த ஏணியில் ஏறி முதலமைச்சர், பிரதமர், சனாதிபதி என்ற நிலைக்கு சந்திரிகா வந்துவிட்டார். அவரின் வெற்றிக்கு முக்கிய காரணியாக இருந்தவர் எஸ்.பி. திஸாநாயக்கவே. அவர் வாக்குகளை உற்பத்திசெய்யும் இயந்திரமானார். எனினும் அவருக்கு கிடைத்ததோ செயலாளர் பதவியாகும். ஆயினும் திஸாநாயக்க என்ற வாக்கு இயந்திரத்தினால் ஐ.தே.கட்சியின் வாக்குகள் குறைந்துவிடும் என்ற சந்திரிகாவின் கருத்து பொய்யாகத் தொடங்கியது. அத்தோடு திஸாநாயக்க மீது சந்திரிகா வலைவீச ஆரம்பித்தார். அந்த வலையில் திஸாநாயக்கா சிக்காதிருந்திருப்பின் இன்று அவர் பிரதமராகியிருப்பார்.

அத்துடன் திஸாநாயக்க கட்சிமாறி ரணிலின் ஐ.தே.கட்சியில் இணைய நேர்ந்ததும் அதன் காரணமாகவே. மட்டுமன்றி சந்திரிக்காவுக்கு நல்ல பாடம் ஒன்றை புகட்டவும் அவர் முயற்சி செய்தார். சந்திரிகாவின் வழியில் சென்றால் சந்திரிகாவும் தானும் கட்சியும் படு வீழ்ச்சிகண்டு விடும் என எண்ணியே திஸாநாயக்க ஐ.தே. கட்சியின் மடியில் விழுந்தார். அவர் ஐ.தே.கட்சியில் இணையாதிருப்பின் 2001 ஆம் ஆண்டு ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்திருக்க முடியாது. அதேபோன்று சந்திரிகாவின் பொ.ஐ.முன்னணி வீழ்ச்சியுற்றிருக்கவும் மாட்டாது. அதனை சந்திரிகா அன்றே உணர்ந்து கொண்டார். அதனாலேயே இவரையொத்த பலத்தை பெற மங்களசமரவீரவின் முயற்சியுடன் ஜே.வி.பியை அவர் இணைத்துக் கொண்டமையாகும்.

திஸாநாயக்க ஐ.தே.கட்சியில் இணைந்ததும் சிறு மனப்பயத்துடனேயே காரணம் முன்னர் ஐ.தே.கட்சியை தோல்வியுறச் செய்ய இவர் எடுத்த முயற்சியாகும். எனினும் பிரேமதாஸாவைப் போன்ற திறமான அரசியல்வாதி ஒருவரை ரணில் தேடிக் கொண்டிருப்பதை இவர் உணரவில்லை. உண்மையில் பிரேமதாஸ கட்சியை உறுதியான பலத்துடனயே விட்டுச் சென்றார். ஆயினும் ரணிலுக்கு அதன் நடவடிக்கைகள் புரியாதிருந்தது. அந்த வெற்றிடத்தை நிரப்ப ஜயவர்த்தன பிரேமதாஸவை சனாதிபதியாக்க உறுதி கொண்ட மாதிரி ரணிலை சனாதிபதியாக்க திஸாநாயக்க ஐ.தே.கட்சிக்குள் இணைந்தார்.

உண்மையில் பிரேமதாஸ நாகரிகம் தலைதூக்கிய வாழைத் தோட்டப் பகுதியிலிருந்து அரசியலுக்குள் வந்தார். ஆனால் திஸாநாயக்க கிராமப்புறமான ஹிங்குராங்கத்த பகுதியிலிருந்து அரசியலுக்கு வந்தவராவர். அன்று இவரைச் சந்தித்த பிரேமதாஸ இவருக்கு உற்சாகமளித்து தன்னைப் போல சிறந்த அரசியல்வாதியாகவும் நீண்ட நாட்களுக்கு கட்சியில் நிலைத்திருக்க வேண்டும் என்று கூறினார். அவரின் பல கனவுகளில் ஒன்றான அனுரா மகுடம் சூட்டக் கூடாது என்பதாகும் . அதனை 10 வருடங்களுக்கு முன்பு திஸாநாயக்க நனவாககினார். அவர் சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். அத்துடன் சந்திரிகா ஆட்சிபீடம் ஏறினார்.

அவரை ஆட்சிபீடம் ஏற்றிய திஸாநாயக்க 10 வருடங்களின் பின்னர் ரணிலை ஆட்சிபீடம் ஏற்ற உறுதிபூண்டார். அதிலும் அவர் வெற்றிகண்டார். ஆயினும் திஸாநாயக்காவின் முயற்சியால் வெளிநாட்டிலிருந்து வரவளைக்கபபட்டு அரசியலில் பிரவேசித்து நிறைவேற்று சனாதி பதி வரை பதவி உயர்வு பெற்ற சந்திரிகா திஸாநாயக்க சிறைக்குள் தள்ளப்படுவதைப் பார்த்து மௌனம் சாதிக்கிறார். ஒருவரை ஆட்சிபீடம் ஏற்றவோ ஆட்சி பீடத்திலிருந்து கவிழ்க்கவோ வல்லமைபெற்ற எஸ்.பி.திஸாநாயக்க சிறைக்குச் சென்றதும் மகிழ்ச்சியுடனேயே. அந்த மகிழ்ச்சிக்கும் காரணம் இருக்க லாம்.அவர் சந்திரிகாவுடன் இருக் கும் போது சந்திரிகா நடத்திய தில்லு முள்ளுகளை வெளிக்கொணர அவருக்கு கிடைத்த நல்ல சந்தர்ப்பம் இதுவாக இருக்கலாம். அது வெற்றியயக்கும் போது சந்திரிகாவின் அரசியல் நீடிப்பு முற்றுப் பெற்று விடும்.

உபுள் ஜோசப் பர்னாந்து
(லங்காதீப)
மொழியாக்கம்
வடிவேல்

---

# க.பொ.த.(சா/த) மாணவர்கள் கற்க இறுவெட்டுக்கள் வெளியிடத் திட்டம்

## -மாகாண கல்வித்திணைக்களம் கூறுகிறது

(திருமலை)

வடக்கு கிழக்கு மாகாண தமிழ்மொழி மூல பாடசாலைகளில் ஜி.சி.ஈ. சாதாரண வகுப்புக்களில் பயிலும் மாணவர்களுக்கு வீட்டிலிருந்து கணிதம், விஞ்ஞானம் மற்றும் பாடங்களைக் கற்கக் கூடிய தான இறுவெட்டுக்களை (சீடி) பெரிய அளவில் தயாரித்து வெளியிடும் திட்டத்தை 2005 ஆம் ஆண்டில் மாகாணக்கல்வித் திணைக்களம் மேற்கொள்ள விருக்கின்றது.

மாகாணக் கல்வித்திணைக் களத்தில் இத்திட்டத்திற்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. ஏ.வேதநாயகம் வெள்ளிக் கிழமை பிற்பகல் இத்திட்டத்தின் முன்னோடியாக ஒரு தொகுதி (சீடி) இறுவெட்டுக்களை வெளியிட்டு வைக்கும் நிகழ்வில் பேசும்போது இத்தகவலைத் தெரிவித்தார். திருகோணமலை, உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் முன்னோடியாகத் தயாரிக்கப்பட்ட சீடிக்களை வெளியிட்டு வைத்தார். இவ் இறுவெட்டுக்கள் மாகாணக்கல்வித் திணைக்கள நிபுணத்துவ ஆசிரியர்களின் நெறிப்படுத்தலின் கீழ் திணைக்கள ஒளிஒலி சாதனப்பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.டொமினிக் தலைமையிலான குழு தயாரித்துள்ளது.

இவ் இறுவெட்டுக்கள் தயாரிக்கும் திட்டத்தை 2005 ஆம் ஆண்டில் விரிவுபடுத்தி நடைமுறைப்படுத்துவதற்காக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப.சிவனேசன் தனது பண்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவை ஒதுக்குவதாக உறுதியளித்திருப்பதான தகவலையும் திருமதி. வேதநாயகம் வெளியிட்டார்.

ஏற்கனவே கணிதபாடம் தொடர்பான மாதிரி சீடிக்கள் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டன என்றும் அங்கு அவை மாணவர் மற்றும் பெற்றோர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன என்றும் அவர் கூறினார். (25)

# வலைப்பாட்டில் ஒளி விழா

வலைப்பாடு,றோ.க.த.க பாடசாலையின் 2004 ஆம் ஆண்டிற்கான ஒளிவிழா கடந்த 7 ஆம் திகதி காலை 10 மணிக்கு பாடசாலைமண்டபத்தில் அதிபர் சு.செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

முதலில் மங்கல விளக்கினை வண. அன்ரன் றொக் அடிகளாரும், இப்பாடசாலையின் முன்னைநாள் அதிபர் திருமதி இ.பாக்கியநாதனும் அருட்சகோதரி அவர்களும், ஏற்றி வைக்க பிரதம விருந்தினர்களை அதிபர், உபஅதிபர், மாணவர்கள் சகிதம் மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு கொடியேற்றல் நிகழ்வுகளுடன் இறைவணக்கம் ஆரம்பமானது.

வரவேற்ப உரையை உப அதிபர் சி. ஸ்ரீரஞ்சன் நிகழ்த்த நிகழ்வுகள் ஆரம்பமானது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வண. பங்குத்தந்தை அன்ரன் றொக்கும், சிறப்பு விருந்தினராக இப்பாடசாலையில் 35 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றி ஓய்வுபெற்ற அதிபர். திருமதி சி. பாக்கியநாதனும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள.இளைஞர் ஒன்றியம், பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர். மாணவர்களின் கலை நிகழ்வுடன் ஆசிரியை செல்வி.ச. ஜெயமேரியின் நன்றியுரையுடன் 230 மணிக்கு நிகழ்வு நிறைவுற்றது. (34)

## சிறுவர் பூங்காவில் திருட்டு

(முள்ளியவளை)

கரைதுறை பற்று பிரதேசபையினரினால் அமைக்கப்பட்ட மாவீரர் கப்டன் லோறன்ஸ் ஞாபகார்த்த சிறுவர் பூங்காவின் அலங்கார மின் குமிழ்கள் கடந்த வாரம் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 26 ஆம் திகதி திறக்கப்பட்ட மேற்படி சிறுவா பூங்கா அழகாக அலங்கரிக்கப்பட்ட நிலையில் மின் குமிழ்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)






ஒரு காலத்தில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியுடன் போட்டி போட்டு தரவரிசையில் முதலாம் இடத்தை எட்டக் கூடிய நிலையில் தென்னாபிரிக்க அணி வலுவுடன் காணப்பட்டது. அவ்வாறானதொரு அணி இந்த நிலையில்

# புதிய திசையில் செல்லுமா?

வீழ்ச்சி கண்டிருப்பது அனைவரினதும் கவனத்தை அதன் பால் திசை திருப்பியுள்ளது. சில காலங்களாக மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு ஏற்பட்டுள்ள நிலை இவ்வணிக்கும் ஏற்பட்டிருக் கின்றதோ எனவும் எண்ணத்தோன்றுகிறது. தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி தற்போது அதன் இரண்டாவது யுகத்தில் இருக் கின்றது. அதாவது 1991இற்கும் 92இற்கும் பின் னாளைய யுகம்.

அது முதலாவது யுகத்தில் கெப்ளர் வெஸல்ஸ், ஹன்சி குறோன்யே, ஷோன் பொலக், கிரேம் ஸ்மித் போன்றோரினால் சிறந்து விளங்கியது. துரதிர்ஷ்ட வசமாக குறோன்யே விமான விபத்தில் பலியானமை அவ்வணிக்கு விழுந்த முடிலடியாகும். அவ்வணி பெரும்பாலான போட்டிகளில் அப்போது வெற்றிபெற்று வந்தது. அது சில வேளைகளில் மட்டுமே டெஸ்ட் போட்டிகளில் தோல்வியைச் சந்திக்கும் அணியாக இருந்தது.

ஷேன் பொலக்கின் தலைமையின் கீழ் 2000ஆம் ஆண்டு அவுஸ்தி ரேலியாவுடனான ஒரு நாள் தொடரில் வெற்றி கண்டது. அத்துடன் சிறிலங்காவுடனான டெஸ்ட் தொடரை 1-1 என்ற ரீதியில் சமன் செய்தது. எவ்வாறாயினும் 2003இல் உலகக் கிண்ணத்தின் பின்னர் அவ்வணி சரிவை நோக்கி செல்கிறது என சிலர் கூறினாலும் 2001ஆம் ஆண்டே அதன் சரிவு ஆரம்பமாகியது எனலாம். 2001-2002 காலப்பகுதியில் அவுஸ்திரேலிய மண்ணில் அவ்வணியுடனான டெஸ்ட் தொடரை 0-3 என்ற கணக்கிலும், தனது மண்ணில் டெஸ்ட் தொடரை 1-2 என்ற கணக்கிலும், ஒரு நாள் தொடரை 1-5 என்ற கணக்கிலும் இழந் தமையானது தனது இரண்டாவது யுகத்தில் கண்ட வீழ்ச்சியாகும். இவற்றுள் சில போட்டிகள் ஷேன் பொலக் தலைமையிலும், சில மார்க் பௌச்சர் தலைமையிலும் நடைபெற்றன. 2003 உலகக் கிண்ணத் தொடரிலும் ஷேன் பொலக் தலைமை தாங்கினார். ஆயினும் அணி தோல்வியைச் சந்தித்ததில் போலக் விமர்சனங்களுக்குள்ளாகினார்.


இதனையடுத்து கிரேம் ஸ்மித் அணியை வழி நடத்தி வருகிறார். இவர் தலைமைப் பதவியேற்று சிறிலங்கா, பாகிஸ்தான் நாடு களுடனான முதலாவது டெஸ்ட் போட்டியிலும் நியூசிலாந்துடனான ஒரு நாள் போட்டியிலும் படுதோல்வியைச் சந்தித்தது. அத்துடன் இவ்வருடம் செப்ரெம்பரில் இங்கிலாந்தில் நடைபெற்ற I.C.C. கிண்ணப் போட்டிகள் 13இல் 2 போட்டிகளில் மட்டுமே வென்றது. இறுதியாக இந்தியாவுடனான டெஸ்ட் போட்டியை இழந்தது.

இவ்வாறு தொடர்ந்து தென்னாபிரிக்க அணி வீழ்ச்சிபெற காரணம் அலன் டொனால்ட், ஜொண்டி றொட்ஸ், ஹன்சி குறோன்யே போன்றோர் இல்லாதிருப்பதா? அல்லது அனுபவமிக்க ஜெக் கலிஸ், மார்க் பவுச்சர், லான்ஸ் குளுஸ்னர் ஆகியோர் இருக்க அனுபவமற்ற கிறேம் ஸ்மித்தை அணித் தலைவராக நியமித்ததால் சக வீரர்கள் ஒத்துழைப்பு வழங்க மறுக்கின்றார்களா? அல்லது பொப்வூல்மர் போன்ற சிறந்த பயிற்றுநர் மீண்டும் அணிக்கு பயிற்றுவிக்க வேண்டுமா? அனைத்துக்கும் விடை காண்போர் அந்நாட்டு கிரிக்கெட் சபை அதிகாரிகளே.

பல தசாப்தகாலங்களுக்கு முன்பு கிரிக்கெட் போட்டிகள் வியாபார மயமாக ஆரம்பித்ததும் மனித நேயம் அடுத்தவரை மதித்தல் என்பன சிறிதுசிறிதாக மறையத் தொடங்கியுள்ளது. இதன் காரண மாக இப்போட்டிகளில் சில ஒழுங்கு விதிமுறைகளைக் கையாளும் தேவை ஏற்பட்டது. இதனால் அதிகாரிகளின் கவனம் களத்தில் பங்கு பற்றுதல் முதல் வெளியிலும் வீரர்களின் பால் திருப்பப்பட்டது.

இதன்காரணமாக சன சமுக நிலையமொன்றில் ஏற்பட்ட மோத லில் சம்பந்தப்பட்ட றிக்கிபொண்டிங்கும் துர்நடத்தையில்

# ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்



ஈடுபட்டதாக ஷேன் வோர்னும் தண்ட னைக்குள்ளாயினர். அவர்களை அணியில் இணைப்பது பற்றியும் தீர ஆலோசிக்கப்பட்டது. அதேபோன்று இந்தியாவின் வினோத் கம்ளிக்கும் ஆயுள் தடை விதிக்கப்பட்டது.

சட்டவிதிகள் ஒரு புறமிருக்க மனிதாபிமானத்தின்படி நோக்கு வோமாயின் இவ்வருட ஆரம்பத்தில் நடைபெற்ற I.C.C மினி உலக கிண்ண போட்டியின் போது பாகிஸ்தானிய வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தரின் பந்து பிடரியில் தாக்கியதால் பிரையன்லாறா நிலை குலைந்து விழுந்த போது பாகிஸ் தான் வீரர்கள் என்ன ஏதென்று பார்க்கவில்லை. ஆயினும் அவுஸ்திரேலியாவுடனான போட்டியொன்றின் போது (அஸ்கிரிய மைதானம்) சிறிலங்கா வீரரின் பந்துவீச்சினால் தாக்கப்பட்ட ஸ்ரீவோவின் வாயிலும், மூக்கிலும் இரத்தம் கொட்டியதும் அனைத்து சிறிலங்கா வீரர்களும் அவரிடம் விரைந்து முதலுதவியளித்ததுடன் வெளியே கொண்டு சென்றதை யாரும் மறந்திருக்க முடியாது.

ஆயினும் இந்த பரோபகார செயல்களிலிருந்து சிறிலங்கா அணி படிப்படியாக விலகிச் செல்வதாகத் தெரிகிறது. அண்மையில் பாகிஸ்தான் அணியுடனான பாக்டெல் கிண்ணத்துக் கான போட்டியில் குமார்சங்கக்கார 137 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது பாகிஸ்தான் வீரரின் பந்து வீச்சில் ஆட்டமிழந்ததும் தனது துடுப்பை அந்தரத்தில் தூக்கி எறிந்து நடுவர்களையும், ரசிகர்களை யும் அவமானப்படுத்தினார். இதனால் நியூசிலாந்தின் நடுவர் அவருக்கு அபராதம் விதித்தார்.

இதேபோன்று 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவுஸ்திரே லியாவுடனான போட்டி ஒன்றின் போது இங்கிலாந்தின் கடைசி துடுப்பாட்டவீரர் டெனிஸ்லிலி அலுமினியத்தாலான (bat) மட்டை ஒன்றை ஆடுவதற்காக கொண்டுவந்தார். நடுவர் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தபோது அவர் மட்டையை ஆடுகளத்தி லிருந்து வீசினார். அது எல்லைக் கோட்டையும் தாண்டிவிழுந்தது. இதுவும் நடுவரை அவமதிக்கும் செயலாகும் அது இப்போது நடைபெறுமாயின் அவர் ஆயுட்கால தடையைப் பெற்றிருப்பார். எனவே எவ்வாறான சாதனை வீரராயினும் ஒழுக்கம் என்பது அவரது வாழ்நாள் பரிசாகும்.

வடிவேல்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவர் அன்ரு சைமன்ஸ்.

சகலதுறை வீரரான இவர் அணி இக்கட்டான நிலையில் இருக்கும்போது நங்கூரம்போல் இருந்து அணியை ஸ்திர மான ஓட்ட எண்ணிக்கைக்கோ அன்றி வெற்றி இலக்கை நோக்கியோ நகர்த்திச் செல்வார்.

சந்தர்ப்பத்துக்கு ஏற்ப சிறப்பாக ஆடும் இவர் பகுதி நேரப் பந்து வீச்சாள ராகவும் செயற்பட்டு அணிக்கு கைகொடுப்பார்.

இவரது சிறப்பான ஆட்டத்தைக் கண்ட கிரிக்கெட் அவுஸ்திரேலியா தனது பலமான துடுப்பாட்ட வரிசையுடன் சைமனையும் இணைக்கத் தவறவில்லை.

சிறிலங்காவுக்கு எதிரான போட்டி அவரது கன்னி டெஸ்ட் போட்டியாக

# சைமன்சின் எதிர்காலம்?



அமைந்தது. ஆனால், ஒரு நாள் போட்டி யில் பிரகாசிப்பது போன்று டெஸ்ட்போட் டியில் அவுஸ் பிரகா சிக்க முடியவில்லை.

இதனால், அவ ரது கடைசி டெஸ்ட் தொடராகவும் அது அமைந்தது.

ஆனாலும், ஒரு நாள் போட்டி அணியென்றால் அவர் இடம்பெறாத அவுஸ்திரேலிய அணி என்பது குறை வானதாகத்தான் இருக்க முடியும். இப் படிப்பட்ட சிறந்த வீரருக்கு தற்போது ஒரு நாள் போட்டியிலும் சரிவு ஏற்பட்டுள்ளது.

இது உலகின் எல்லா துடுப்பாட்ட வீரருக்கும் ஏற்படுவது போன்ற சரிவாக இருக்கின்றபோதும் அவுஸ்திரேலி அணியைப் பொறுத்து பிரகாசிக்கத் தவறும் வீரர் காணாமல் போகும் பரி தாபம் ஏற்பட்டுவிடும்.

ஏனெனில், அவுஸ்திரேலிய அணியில் நுழைவதற்கு ஏராளமான திறமையான வீரர்கள் காத்துக் கொண்டுள்ளனர்.

இது ஒரு வீரர் சராசரி ஓட்டங் களையாவது பெறாத பட்சத்தில் அணி யில் நீடிப்பது என்பது கேள்விக்குரிய




தாக மாறிவிடும். இதில் முன்னர் நன்றாக செயற்பட்டவர் எதிர்காலத்தில் நன்றாக செயற்படுவார் என்ற கேள்விக்கே இட மில்லை. திறமையான வீரர்களுக்கு முன் னுரிமை என்ற கோட்பாட்டில் எந்த வீரர் என்றாலும் தூக்கி எறியப்படும் நிலை உருவாகிவிடும்.

இந்த நிலையில், பிரகாசிக்கத் தவறும் வீரரின் வாய்ப்பைப் பயன் படுத்தி அணியில் இடம்பிடிக்கும் வீரர் தொடர்ந்து பிரகாசிப்பாராயின் விலக்கப் பட்ட வீரர் மீண்டும் அணியில் நுழைவது என்பது "இலவு காத்த கிளி" போன்றதுதான்.

இந்த நிலை சைமன்சுக்கு ஏற்படுமா என்பதே கிரிக்கெட் வல்லுநர்களின் கேள்வி யாக உள்ளது. அண்மையில் நிறைவு பெற்ற நியூசிலாந்துக்கு எதிரான இரண்டு ஒரு நாள் போட்டியில் அன்ரு சைமன்ஸ் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார். இது அவரின் துடுப்பாட்டத்தில் ஏற்பட்ட சரிவை வெளிப்படுத்தியது.ஆனாலும், பந்து வீச்சில் இரண்டு போட்டியிலும் இரண்டு விக்கெட்டுகளை கைப்பற்றி தனது மனதைத் தேற்றிக் கொண்டார்.

அணித் தலைவர் பொண்டிங்கிற்கு நம்பிக்கைக்குரியவரான சைமன்சின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் போட்டி யாக அவுஸ்திரேலிய, மேற்கிந்தியத்தீவு, பாகிஸ்தான் அணிகள் கலந்து கொள் ளும் மும்முனை தொடர் இருக்கும் என கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.



லண்டன் தாயக உறவுகளைக் கொண்ட கால்பந்து அணி ஒன்று தாயகத் திற்கு வருகை தந்து சினேகபூர்வ கால் பந்து போட்டிகளில் விளையாடி வரு கின்றது.

# வளர்ப்பதே முதலானது

தாயகத்தில் கால்பந்தை வளர்ப்பதும், உறவுகளைப் பலப்படுத்தும் வகையிலும் அமைந்த இந்த சினேகபூர்வ போட்டிகள் விறுவிறுப்பு மிகுந்ததாக அமைந்து வருவதுடன் ரசிகர்களுக்கும் அரியதொரு காட்சியாக அமைந்துள்ளது.

சர்வதேச கால்பந்து நுட்பங்களை தம்மிடையே அகத்துறிஞ்சி சிறப்பாக விளையாடும் இவ் அணி வெற்றி தோல்வி என்பதற்கு அப்பால் எமது உறவுகளும் நெருக்கடிக்கு மத்தியில் சிறந்த கால்பந்து அணிகளை கொண் டுள்ளதைக் கண்டு பெருமை கொள் கின்றது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்ட அணிகளுடன் விளையாடிய இவ் அணி யாழ். மாவட்டத்தின் முன்னணி அணி களுக்குச் சவாலாக விளங்கியதுடன் யாழ். பல்கலைக்கழக அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்கடித்தும் இருந்தது.

இதேவேளை, முல்லை. மாவட்டத்தில் முன்னணி அணிகளில் ஒன்றான சுப்பராங் அணியுடன் போட்டியிட்ட லண்டன் தாயக அணி 1-3 என்ற கோல் எண்ணிக்கையில் தோல்வி அடைந்தது.

புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு மைதானத்தில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் போட்டியின் முதல் பாதியில் ஒவ்வொரு கோல்களைப் போட்டு சமநிலையில் இருந்தன.

போட்டியின் இரண்டாவது பாதியில் சுப்பராங் அணி மேலும் இரண்டு கோல்களைப் போட்டு வெற்றியீட்டியதுடன் தனது திறமையையும் வெளிப்படுத்தியது.

சுப்பராங் அணி சார்பில் றொபின்சன், பொறின், ஈசன் தலா ஒவ்வொரு கோல்களையும்,லண்டன் தாயக அணி சார்பாக கண்ணன் ஒரு கோலையும் போட்டனர்.

இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக வின்சன், சசீதரசீலன், முகுந்தன் ஆகியோர் கடமையாற்றினர்.

எமது தாயக கால்பந்து வளர்ச்சியே பிரதான நோக்கமாகக் கொண்டு வருகை தந்துள்ள லண்டன் தாயக அணியினர் சுப்பராங் அணிக்கு 25000 ரூபா பணப் பரிசும், பதக்கங்கள் மற்றும் உபகரணங்களையும் வழங்கிக் கௌரவித்தனர்.

முல்லை. வலய கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளர் மைக்கல் திலகராசா தலைமையில் நடைபெற்ற நடைபெற்றமேற்படி நிகழ்வில் பல்துறை சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.(08)



லண்டன் தாயக அணியுடன் சுப்பராங் அணி வீரர்களும், பல்துறை சார்ந்தவர்களை யும் படத்தில் காணலாம்.

### இலங்கை திரும்பினார்

ஈராக்கில் வைத்து தீவிரவாதிகளால் கடத்திச்செல்லப்பட்டு ஒரு மாதத்தின் பின்னர் விடுதலை செய்யப்பட்ட இலங்கையரான தினேஸ் ராஜரட்ணம் சனிக்கிழமை காலை இலங்கையை வந்தடைந்தார். இவரும் இவருடன் கடத்திச் செல்லப்பட்ட பங்களாதேஷ் பிரஜை ஆகியோர் அமெரிக்கர்களுக்கு மீண்டும் உதவக்கூடாது என்ற எச்சரிக்கையின் அடிப்படையிலேயே விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டு - அம்பாறை மாவட்டங்களில் அடை மழை

# 25 ஆயிரத்திற்கும் மேலான குடும்பங்கள் பாதிப்பு

## கிராமங்கள் பல வெள்ளத்தில் மூழ்கின

**மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாக தாழ்ந்த பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதன் காரணமாக இம் மாவட்டங்களில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நூற்றிற்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.**

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகின்ற போதிலும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இடைவிடாது மழை பெய்கின்றது. இதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களும் அம்பாறை மாவட்டத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இக்குடும்பங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி உறவினர் வீடுகளிலும், பொது இடங்களிலும் தற்காலிகமாக தஞ்சம் பெற்றுள்ளன. 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெரும்போக வேளாண்மைச் செய்கை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. வீதிகளில் வெள்ளம் காரணமாக சில இடங்களில் போக்குவரத்துச் சேவைகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு வாவி மற்றும் விவசாயக் குளங்களின் நீர்மட்டங்கள் உயர்ந்துள்ளன. கடல் கொந்தளிப்பாக காணப்படுகின்றது. மக்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றார்கள். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான விபரங்களை திரட்டுமாறு அரசாங்க அதிபர்களினால் பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

# கூட்டமைப்பு பா.உறுப்பினர்களுக்கு எதிராக சனவரியில் சிறப்புரிமைப் பிரேரணை

## ஆளும் கட்சியினர் முயற்சி

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் ஆகியோரை கட்டுப்படுத்தும் முகமாக எதிர்வரும் சனவரி முதல் வாரப்பகுதியில் பாராளுமன்றத்தில் விசேட சிறப்புரிமை பிரேரணையை கொண்டுவர ஆளும் கட்சியினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். சிறிலங்காவில் அரசியல் அமைப்புக்கு உட்பட்டதாக அமையும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுக்கள் அமையவேண்டும் என்றும் அதனை மீறுவோருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுப்பது என்பது தொடர்பாகவும் இந்த பிரேரணையில் சட்ட வாக்கங்க வரையறுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

### ஜயந்த தனபாலவுக்கு போட்டியாளர்

ஐக்கிய நாடுகள் சபையின் அடுத்த செயலர்பதவிக்காக போட்டியிட முயற்சி மேற்கொண்டு வரும் சமாதான செயலக பிரதான் ஜயந்த தனபால பலத்த போட்டியை எதிர்கொள்ள வேண்டியேற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது இவரை எதிர்த்து சொக்கோஸ்லேவேக்கியாவின் முன்னாள் சனாதிபதி வட்கோ பவல்போட்டியிடவுள்ளார் இவருக்கு அதிகளவான நாடுகளின் ஆதரவு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது (32)

# திஸாநாயக்கவை ஐ.தே.பா.உறுப்பினர்கள் சிறையில் பார்வையிடுவதைத் தடுக்க உத்தரவு

## சிறைச்சாலை ஆணையாளருக்கு சந்திரிகா பிறப்பிப்பு

(கொழும்பு)

எஸ்.பி.திஸாநாயக்கவை ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி சென்று பார்வையிடுவதை தடுக்குமாறு சனாதிபதி சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. இதன் அடிப்படையில் இந்த நடைமுறை விரைவில் அமுலுக்கு வரலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு சென்று எஸ்.பி திஸாநாயக்கவை சந்திப்பதானது அவருக்கு அனுதாப அலையை அதிகரிக்கக்கூடும் என்ற காரணத்தினாலேயே இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக கருதப்படுகிறது. எனினும் இது பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறும் செயல் என்ற அடிப்படையில் பாரிய எதிர்ப்பு அலையை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை எஸ்.பி திஸாநாயக்க சனாதிபதியிடம் மன்னிப்புக் கோரும் கடிதம் ஒன்றை தர வேண்டும் எனக்கோரி சனாதிபதி தரப்பின் முக்கிய இரண்டு பிரமுகர்கள் எஸ்.பி திஸாநாயக்கவையும் அவரது மனைவியையும் வலியுறுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் எழுத்து மூல மன்னிப்புக்கு எஸ்.பி.திஸாநாயக்க இதுவரை இணங்கவில்லை என கூறப்படுகிறது. (32)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை உடன் கொண்டுவரப்படமாட்டாது

(கொழும்பு)

சபாநாயகர் டபிள்யூ ஜே.எம். லொக்குபண்டாரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டாம் எனசனாதிபதி கேட்டுள்ளார்.

சபாநாயகர் லொக்கு பண்டார அண்மையில் பாராளுமன்றத்தில் அமைதியை ஏற்படுத்துவதில் உரிய முறையில் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர ஆளும் கட்சி முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. இந்த நிலையில் அதனை உடனடியாகக் கொண்டு வர வேண்டாம் எனவும் அதனை கொண்டுவர வேண்டிய தருணம் குறித்து தாம் அறிவிப்பதாகவும் தமது ஆளும் கட்சியினருக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார். அவரின் அறிவுறுத்தலின்படி எதிர்வரும் சனவரி மாதம் நடுப்பகுதி வரை சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படாது எனக் நம்பப்படுகிறது. (32)

17 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 10-05-1948
அமரர்
உதிர்வு 14-12-1987

இரத்தினசிங்கம்-சரஸ்வதி

பதினேழு ஆண்டு என்னம்மா!
பதினேழாயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எம்மைவிட்டு நீங்காதம்மா

தகவல் - குடும்பத்தினர்
வேம்படி, வடக்கு, உடுத்துறை.
[5451]

மகிழ்ச்சிகரமான நிறைவான மக்கள் சேவையில்

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

கூட்டுறவு நகர்
CO-OP CITY
மங்களகரமான ஆரம்பம்
இன்று

செவ்வாய்க்கிழமை மாலை 3.00மணி
இது உங்கள் நிறுவனம்! மக்கள் நிறுவனம்!
உங்கள் வரவும் உங்கள் ஆதரவும் எம்மை மகிழ்விக்கும்
உங்கள் அனைவரையும் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.
நன்றி

உங்கள் தேவை-எங்கள் சேவை
குறைந்த விலையில் தரம் நிறைந்த பொருட்கள்

127,காங்கேசன்துறை சாலை,
யாழ்ப்பாணம்.

தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,

மாறிவரும் சிந்தனைக்கு
ஏற்ப கூட்டுறவின் நவீன சேவைகள்
யாழ்.குடாநாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பணியில்...

சுத்தமாகப் பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருட்கள் ,இறைச்சி வகைகள்,
புதுவகையான ஐஸ்கிறீம் வகைகள் , குளிர்பான வகைகள்,
பழவகைகள், பழரசங்கள், ஆங்கில மருந்துவகைகள் ,அன்பளிப்பு, அழகுசாதன
வாசனைப் பொருட்கள், பாடசாலைப் பொருட்கள்,
எழுதுகருவிகள்,சிறுவர், சிறுமியர்களுக்கான அன்பளிப்புப் பொருட்கள்

இவை மட்டுமன்றி

ஊரக வைப்பகம்,மருந்தகம்,முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட
பதிப்பகம் (ஓவ் (ƒ) செற்),
தொலைத் தொடர்பகம்
(பக்ஸ்,போட்டோப்பிரதி, றோணியோ அட்டையிடுதல்)
சுத்தம்,சுகாதாரம் நிறைந்த உணவகம், கூட்டுறவின் உள்ளூர்
உற்பத்திகளின் காட்சிறையும்,விற்பனையும்.

இவை அனைத்தையும் ஒரே மாளிகையில்,ஒரே
இடத்தில் குளிரூட்டப்பட்ட கணனிமய
சேவையினூடாகப் பெற்றுக் கொள்ளலாம்.
(சி.10963)

# நரேந்திரமோடிக்கெதிரான இரானியின் பிரச்சாரம், அத்வானியின் தலையீட்டால் நிறுத்தம்

(அகமதாபாத்)

**நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் குஜராத் மாநிலத்தில் பாரதிய ஜனதாக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரபல ரெலிவிஷன் நடிகை ஸ்மிரிதி இரானி சூறாவளிப் பிரச்சாரம் செய்தார். அவருக்கு பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் பதவி கொடுக்கப்பட்டது. நடிகை இரானி நேற்று சூரத்தில் நடந்த திறப்புவிழாவில் கலந்துகொண்டார். அப்போது அவர் பரபரப்பு குற்றச்சாட்டை வெளியிட்டார்.**

குஜராத்தில் நான் எந்தப் பகுதிக்கு சுற்றுப்பயணம் செய்தாலும் கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவம் பற்றியே மக்கள் பேசுகிறார்கள். இதனால் பாரதிய ஜனதா கட்சியின் செல்வாக்குக் குறைந்துள்ளது. இதை ஏற்று குஜராத் முதல்வர் பதவியில் இருந்து நரேந்திரமோடி விலகவேண்டும்.

வருகிற 25 ஆம் திகதி முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பிறந்த தினத்தையொட்டி நரேந்திரமோடி பதவியைவிட்டு விலகும் வரை தொடர் உண்ணாவிரதப் போராட்டம் இருக்கப் போகிறேன். வாஜ்பாய் சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசியபோது , தன்மேல் உள்ள ஒரே களங்கம் நரேந்திரமோடி என்று குறிப்பிட்டுள்ளார். தவறுகளைத் திருத்திக்கொள்வதில் தவறு இல்லை. வாஜ்பாய் போன்ற நல்ல மனிதரின் புகழ்,செல்வாக்குக் குறையவிடக்கூடாது, நரேந்திர மோடிபதவி விலகுவதன் மூலம் கட்சியின் செல்வாக்கு மேலும் உயரும்.

இவ்வாறு நடிகை ஸ்மிரிதி இரானி தெரிவித்தார்.இதை அறிந்த பாரதிய ஜனதாத்தலைவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அகில இந்திய தலைவர் எல்.கே அத்வானியுடன் நேற்று இரவு இரானி தொலைபேசியில் பேசினார். அப்போது நரேந்திரமோடி பற்றித் தெரிவித்த கருத்துக்களை மறுக்காவிட்டால் கட்சி மேலிடம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் என்று எச்சரித்ததாகத் தெரிகிறது.

இதைத்தொடர்ந்து நடிகை இரானி மாராட்டிய மாநில பாரதிய ஜனதா தலைவர் கோபிநாத் முண்டேவுடன் வருத்தம் தெரிவித்தார். இந்தச்சம்பவம் குறித்து குஜராத் மாநில பாரதிய ஜனதாத் தலைவர் ராஜேந்திர சிங்ரானா நிருபர்களிடம் கூறுகையில், தேசிய செயற்குழு உறுப்பினரான இரானியின் கருத்துக்களுக்கு கட்சி மேலிடம்தான் கருத்துத் தெரிவிக்க முடியும். "

மக்கள் செல்வாக்குடன் கடந்த ஆண்டு வெற்றிபெற்று முதல்வரான நரேந்திரமோடிபற்றி இரானி கருத்துத் தெரிவித்ததால் பாரதிய ஜனதாக் கட்சியின் செல்வாக்குப் பாதிக்கப்பட்டுள்ளது. மாராட்டிய மாநிலத்தில் பிரபலமான இரானியை குஜராத்தில் யாருக்கும் தெரியாது. அப்படிப்பட்ட இரானி குஜராத் முதல்வர் பற்றிக் கருத்துத் தெரிவிக்கத் தகுதியற்றவர் என்று தெரிவித்தார்.


# தெகல்கா ஆயுத ஊழல் வழக்கை சி.பி.ஐ. விசாரணை

(புதுடில்லி)

தெகல்கா ஆயுத பேர ஊழல் வழக்கை விசாரிக்கும் பொறுப்பை சி.பி.ஐ.யிடம் ஒப்படைத்து மத்திய அரசு சமீபத்தில் உத்தரவிட்டது.

இதையடுத்து பா.ஜனதா முன்னாள் தலைவர் பங்காரு லட்சுமணன், சமதா கட்சி முன்னாள் தலைவர் ஜெயா ஜெட்லி மற்றும் முன்னாள் அரசு அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் உட்பட பலர் மீது சி.பி.ஐ. ஐந்து வழங்குகளைப் பதிவு செய்துள்ளது.

அடுத்த கட்டமாக தெகல்கா ஆயுத பேர ஊழலில் இவர்கள் அனைவரும் எந்த வகையில் பங்கு பெற்றனர் என்பது பற்றி தஸ்தாவேஜுகள் மூலம் சி.பி.ஐ. ஆய்வு நடத்தி வருகிறது. இந்த ஆய்வு முடிந்ததும் பங்காரு லட்சுமணன், ஜெயா ஜெட்லி அனைவரிடமும் சி.பி.ஐ. அதிகாரிகள் அடுத்த வாரம் விசாரணை நடத்த முடிவு செய்துள்ளனர். சி.பி.ஐ. தலைமை அலுவலகத்தில் விசாரணை நடைபெறும். இதில் ஆஜராகும் படி அனைவருக்கும் விரைவில் அழைப்பு அனுப்பப்படுகிறது.



ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து விஸ்வ இந்து பரிஷத் சார்பில் சென்னை தி.நகரில் கண்டன பொதுக்கூட்டம் நடந்தது. இதில் ம.பி.முன்னாள் முதல்வர் உமாபாரதி பேசுகிறார்.

# இளைய சங்கராச்சாரியாரின் சகோதரன் ரகுவை பொலிசார் விசாரித்தனர்

(சென்னை)

சங்கரராமன் கொலை வழக்குத் தொடர்பாக இளையமடாதிபதி விஜயேந்திரனின் தம்பி ரகுவை நேற்று முன்தினம் தனிப்படை பொலிசார் விசாரணை நடத்தினார்கள். 3மணி நேரம் விசாரணை நீடித்தது. காஞ்சிபுரம் கோவில் நிர்வாகி சங்கரராமன் கொலை வழக்கில் காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரர் உட்பட 20 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். முக்கிய குற்றவாளிகளான அப்பு, சுப்பிரமணியம் ஆகியோர் பொலிசில் பிடிபடாமல் தலைமறைவாக உள்ளனர். அவர்கள் இருவரையும் தனி பொலிஸ் படை இந்தியா முழுவதும் சல்லடை போட்டுத் தேடி வருகிறது. இதற்கிடையே சங்கரராமன், ஜெயேந்திரருக்கு எழுதிய கடிதங்களை அடிப்படையாக வைத்து தனி பொலிஸ்படை அதிகாரிகள் பல்வேறு கோணங்களில் விசாரணையை முடுக்கி விட்டுள்ளனர். சங்கரமட நிர்வாகிகள் உட்பட பல்வேறு தரப்பினர் வரவழைக்கப்பட்டு அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. காஞ்சி சங்கர மடத்தின் நிர்வாகி சுந்தரேசன் பலமுறை அழைக்கப்பட்டு அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

நடிகை சொர்ணமால்யா, ஸ்ரீரங்கம் உஷா, தணிக்கையாளர் எஸ்குருமூர்த்தி, ஜனகல்யாண் அமைப்பினர் உட்பட வேறு பலரும் விசாரணைக்கு ஆஜராகி பொலிசாரின் கேள்விகளுக்குப் பதில் அளித்தனர்.

ஜெயேந்திரர் வழக்கில் ஒவ்வொரு நாளும் புதிய, புதிய தகவல்கள் வெளிவந்து பரபரப்பை ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் அதிரடி திருப்பம் ஏற்பட்டது.

இளைய மடாதிபதி விஜயேந்திரரின் தம்பி ரகு இருவரும் சங்கர மடத்தில் பணியாற்றி வருகிறார். சங்கரராமன் கொலைவழக்குத் தொடர்பாக ரகுவிடம் ஏற்கனவே பொலிசார் விசாரணை நடத்தி உள்ளனர்.

ஆனாலும் நேற்று முதல் முறையாக அவருக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டார். அதிகாரப்பூர்வ முறையில் அவரை பொலிசார் அழைத்தது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

மாவட்ட பொலிஸ் அதிகாரி பிரேம்குமார், மேலதிக பொலிஸ் அதிகாரி சக்திவேல் ஆகியோர் முன்பு நேற்று முன்தினம் இரவு ஆஜரானார். அவருடன் இளைய மடாதிபதியின் உதவியாளரும் சட்டவாளருமான வைத்தியநாதன், சங்கரமட சட்டவாளர் சண்முகம், அவருடைய உதவியாளர் ரேவதி ஆகியோரும் உடன் வந்து இருந்தனர். ரகுவிடம் 3மணி நேரம் விசாரணை நீடித்தது. பொலிஸ் விசாரணையின் முடிவில் ரகு கைது செய்யப்படலாம் என்று காஞ்சிபுரத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டது. இந்நிலையில் நேற்றும் விசாரணை தொடர்ந்தது.

# ஜம்மு-காஷ்மீரின் முன்னாள் முதல்வர் மரணம்

ஜம்மு-காஷ்மீர் முன்னாள் முதல்வர் மிர்காசிம்(83) டில்லியில் ஞாயிற்றுக்கிழமை காலமானார். நெஞ்சுவலி காரணமாக டில்லிராம் மனோகர் லோஹியா மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு 4 பிள்ளைகள் உள்ளனர். 1972 ஆம் ஆண்டு அப்போதைய ஜம்மு-காஷ்மீர் முதல்வர் ஜீ.எம்.சாதிக் காலமான பிறகு, முதல்வாகப் பதவியேற்ற பின்னர் 1975 இல் முதல்வர் பதவியிலிருந்து விலகி இந்திரா காந்தி அமைச்சரவையில் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சரானார். அகில இந்திய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் உட்பட பல்வேறு பொறுப்புக்களைவகித்தார். மை லை.'.ப்,மை டைம், என்ற நாவலை எழுதியவர். அரசியல்தலைவர்கள் உட்பட பலர் இவரின் மறைவுக்கு அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.

# பாபர் மசூதி பிரச்சினைத் தீர்வுக்கு தனி நீதிமன்றம் தேவை!

பாபர் மசூதி பிரச்சினைக்கு தீர்வு காண உடனடியாக தனி நீதிமன்றம் அமைக்க மத்திய அரசு முன்வர வேண்டும் என்று தமிழக பகுஜன் சமாஜ் கட்சி கோரிக்கை வைத்துள்ளது. இது தொடர்பாக அந்த கட்சியின் மாநில தலைவர் கே.எம்.ஷரிப் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

பாபர் மசூதி இடிக்கப்பட்டு பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் அது சம்பந்தமான வழக்கு இன்னமும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 6ஆம் திகதி வரும்போது அந்த மாதம் முழுவதும் அறிவிக்கப்படாத நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்ட தேசமாக இந்தியா மாறிவிடுகிறது. கோடிக்கணக்கான ரூபாய்கள் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக செலவு செய்யப்படுகிறது. அப்படியிருந்தும் பல இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நடக்கின்றன. எத்தனை ஆண்டுகளுக்கு இந்நிலை நீடிப்பது?

இதற்கு முடிவு கட்ட ஒரே வழி மத்திய அரசு உடனடியாக இவ் வழக்கை மட்டும் விசாரிக்க ஒரு தனி நீதிமன்றத்தை அமைத்திட வேண்டும். குறிப்பிட்ட மாதங்களுக்குள் அந்நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டும் என காலக்கொடு நிர்ணயிக்கலாம். அந் நீதிமன்றம் அளித்த தீர்ப்பே இறுதியானது என அறிவித்து இரண்டு தரப்பாரும் அதை ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாத தரப்பார் மீது அரசு மிகக்கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் தேவைப்பட்டால் தீர்ப்பபை ஏற்றுக் கொள்ளாத பிரமுகர்களை நபர்களை நாடு கடத்திட ஏற்பாடு செய்ய வேண்டும் இந்த அளவு கடுமையாக இருந்தால்தான் இப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் இல்லை என்றால் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 6 ஆம் திகதி ஒரு கறுப்பு நாளாக மாறிவிடக் கூடிய அபாயம் ஏற்படும் இதை மத்திய அரசு உணர வேண்டும் என்றும் அவா கூறியுள்ளார்.

# இளைஞரின் வயிற்றில் இரும்புகள் சத்திர சிகிச்சை மூலம் வெளியேற்றம்!

ஆந்திர மாநிலம் கரிம்நகர் மாவட்டம் கோதாவரிகனி என்ற இடத்தில் நிலக்கரி சுரங்கத்தில் வேலை பார்க்கும் ராஜம் என்பவரது மகன் நாகராஜு (வயது 22) இவர் சிறு வயதில் இருந்தே இரும்புப் பொருட்களை எடுத்து விழுங்கிவிடுவார். இதைப் பார்த்த பெற்றோர் நாகராஜு கண்ணில் படாதவாறு இரும்புப் பொருட்களை எடுத்து மறைத்து வைத்தனர். என்றாலும் அவ்வப் போது பெற்றோருக்குத் தெரியாமல் தின்று விடுவார். இப்படியே பல வருடங்களாக அவர் இரும்பு பொருட்களை தின்றார்.

இதனால் அவனுக்கு அடிக்கடி வயிற்று வலி ஏற்பட்டது. அதாவது மருநது மாத்திரை கொடுத்தால் சரியாகிவிடும் சமீபத்தில் அவருக்கு வயிற்றுவலியுடன் வாந்தி பேதியும் ஏற்பட்டது. உடனே நாகராஜுவை சிங்கரபேனி வைத்தியசாலையில் சேர்ந்தனர். எந்த மருந்து கொடுத்தாலும் வயிற்று வலி நிற்காததால் டாக்டர்கள் ஸ்கேன் எடுத்து பார்த்தனர். ஸ்கேன் ரிப்போட்டை பார்த்த டாக்டர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

ஸ்குரூடிரைவர், ஸ்பெனர்சாவி இரும்பு, வளையம், ஆணி நட்டு என ஏராளமான இரும்புப் பொருட்கள் இருப்பதை அறிந்தனர். உடனே சத்திர சிகிச்சை செய்து அவற்றை வெளியே எடுத்தனர் மொத்தம் 89 வகையான இரும்பு பொருட்கள் அகற்றப்பட்டன.

தற்போது அவரது உடல் நலம் தேறிவருகிறது. வைத்தியர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

# யூரியா உர உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு பெறும் அமைச்சர் ராம்விலாஸ்

(புதுடில்லி)

"யூரியா உரம் உற் பத்தியில் இந்தியா விரைவில் தன்னி றைவு பெறும்" என்று அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் கூறினார். மத்திய உர அமைச்சர் ராம்விலாஸ பஸ்வான் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது ஹசீரா நிறுவனத்தில் யூரியா உற்பத்தி வரும் 2007 ஆம் ஆண்டு முதல் துவங்கும். இங்கு ஆண்டுதோறும் 10.50 இலட்சம் தொன் யூரியாவை உற்பத்தி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.


இந்தியாவும் ஓமான் நாடும் இணைந்து கூட்டு முயற்சியில் யூரியா உரம் தயாரிக்கும் பணியில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது. இந்தப் பணி நிறைவு பெற்ற பின் ஆண்டுக்கு 16 இலட்சம் தொன் யூரியா உற்பத்தி செய்ய முடியும்.அலகாபாத்திலுள்ள இப்கோ நிறுவனத்தின் கிளை நிறுவனமான புல்பூர் நிறுவனத்தில் ஆண்டு தோறும் 14.50இலட்சம் தொன் யூரியா உற்பத்தி செய்யப்பட்டது. இது உலகில் மிக அதிகமாக யூரியா உற்பத்தி செய்யப்படும் நிறுவனமாக கருதப்பட்டது. இப்கோ ஊழியர்களின் சேவையைப் பாராட்டி ஊக்கப்பரிசாக தலா ரூ.500 வழங்க மத்திய உரத்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது. உள்நாட்டு தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மூன்று இலட்சம் தொன் யூரியா உரத்தை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறோம். மருந்துப் பொருட்கள் குறிப்பாக உயிர்காக் கும் அரிய மருந்துகளின் விலையைக குறைக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### விபரம் வெளியிட வலியுறுத்து

பாகிஸ்தான் பிரதமர் ஷௌகத் அசீஸுடன் பேசியது குறித்து பிரதமர் மன்மோகன்சிங் வெளியிட வேண்டும் என பாஜக கோரியுள்ளது. மூத்த பாஜக தலைவர் ஜஸ்வந்த்சிங் ஞாயிற்றுக்கிழமை நிருபர்களிடம் கூறியதாவது;

பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பை நியூயோர்க்கில் மன்மோகன்சிங் சந்தித்துப் பேசினார். அச்சந்திப்பிற்குப் பின் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் பயங்கரவாதம் குறித்து எதுவும் கூறப்படாதது வியப்பளிக்கிறது. பயங்கரவாத எதிர்ப்புப் பிரச்சினையில் மத்தியரசுக்குத் தெளிவில்லை. நிலையான கொள்கையும் இல்லை எனத் தெரிவித்தார்.

# இரண்டாவது இனிங்சிலும் பதான் அபாரப் பந்துவீச்சு;
# இனிங்ஸ் மற்றும் 140 ஓட்டங்களால் இந்தியா வெற்றி!



பங்களாதேசுக்கு எதிராக டாக்காவில் நடைபெற்று வந்த முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஒரு இன்னிங்ஸ் 140 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றி பெற்றது.

வங்களாதேசம் முதல் இன்னிங்சில் 184 ஓட்டம். இந்திய அணி



முதல் இன்னிங்சில் 526 ஓட்டம், டெண்டுல்கர் 248 ஓட்டம் ஆட்டமிழக்காது, சாகீர்கான் 75 ஓட்டம், கங்குலி 71 ஓட்டம் எடுத்தனர்.

342 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்சை விளையாடிய வங்களாதேசம் நேற்று முன்தினம் 3ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 170 ஓட்டம் எடுத்து இருந்தது. இஸ்லாம் ரானா 50 ஓட்டங்களுடனும், பைசியா 17 ஓட்டத்துடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

4ஆவது நாளான நேற்று இருவரும் தொடர்ந்து ஆடினார்கள். போட்டி தொடங்கிய சிறிது நேரத்தில் பைசியா 29 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழந்தார். அவரது விக்கெட்டை பதான் கைப்பற்றினார். கடைசி விக்கெட்டுக்கு இஸ்லாம் ரானாவுடன், மொர்தாஜா ஜோடிசேர்ந்தார்.

சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த ரானா கடைசியாக ஆட்டம் இழந்தார். வங்களாதேசம் 53.2 ஓவர்களில் 202 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 140 ஓட்ட வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.




மஞ்சுரல் இஸ்லாம், ரானா 116 பந்துகளில் 11 பவுண்டரியுடன் 69, இக்பால் 54 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர். இர்பான், பதான் 51 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். முதல் இன்னிங்சில் அவர் 5விக்கெட் எடுத்து இருந்தார். மொத்தம் அவர் 11 விக்கெட் சாய்த்தார். கும்ப்ளே 2 விக்கெட்டும், சாஹீர்கான், ஹர்பஜன்சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக பதான் தெரிவானார். இந்த வெற்றி மூலம் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது. இந்தியா-வங்களாதேசம் அணிகள் இடையேயான 2ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி வரும் 17ஆம் திகதி சிட்டஹொங்கில் தொடங்குகிறது.



இந்தியா அணியின் வேகப்பந்து வீச்சாளர் சஹீர்கானுக்கு பாகிஸ்தான் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வசீம் அக்ரம் பந்து வீச்சுத் தொடர்பாக விளக்கமளிக்கின்றார்.

## பங்களாதேசம் படுதோல்வியைச் சந்தித்தாலும் டெஸ்ட் அந்தஸ்த்துக்கு உரியதாகவுள்ளது



வட்மோர்

பங்களாதேஷ் டாக்காவில் நடந்த இந்தியாவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி படுதோல்வியைச் சந்தித்ததையடுத்து அந்நாட்டுக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கக் கூடாது என்னும் பலரின் கருத்துக்களையும் நிராகரித்துள்ளார் பயிற்சியாளர் வட்மோர். பங்களாதேஷ் போட்டியிட்ட 33 டெஸ்ட் போட்டிகளில் 30ஆவது தோல்வி இதுவாகும்.

அவர் மேலும் கூறும்போது; ஆசியாக் கண்ட அணிகள் பெற்றுள்ள அதே திறமையையே பங்களாதேஷ் அணி பெற்றிருப்பதாகவும் சில ஊடகங்கள் கூறுவதைப்போல் நுட்பம் தெரியாத அணி என்று கூற முடியாது என்றும் தெரிவித்துள்ளார். ஆயினும் பங்களாதேஷ் அணி கிரிக்கெட்டை ஆழமாகச் சிந்திக்காமல் அலட்சியம் செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

## இவ் ஆண்டுக்கான இங்கிலாந்தின் சிறந்த வீராங்கனையாக கெல்லி ஹோலம்ஸ்



இங்கிலாந்தின் 2004ஆம் வருடத்துக்கான சிறந்த விளையாட்டு வீராங்கனையாக கெல்லி ஹோலம்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

34 வயதான இவர் எதென்ஸ் ஒலிம்பிக்கில்800,1500 மீற்றர் ஓட்டப்பந்தயங்களில் தங்கப் பதக்கம் வென்றார். பொது வாக்கெடுப்பின் மூலம் இவர் அந்நாட்டின் கிரிக்கெட் வீரர் அன்ரூ பிளின்டொப், படகுப் போட்டி வீரர் மத்தியூபின்சன்ட் ஆகியோரை வென்று முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இது பற்றி அவர் கருத்து தெரிவிக்கும்போது, இந்தச் சம்பவம் தான் 1500 மீற்றர் இறுதிப் போட்டியில் வென்றதைவிட மகிழ்ச்சியளிப்பதாகவும், தன்னை சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்வதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதாகவும் கூறினார்.அத்துடன் ஒலிம்பிக் போட்டி வரை செல்ல உதவியளித்த குடும்பத்தினருக்கும் விசேடமாக நன்றி தெரிவிப்பதாகவும் கெல்லி ஹோலம்ஸ் தெரிவித்துள்ளார்.

## தோல்வியின் எதிரொலி இந்திய பயிற்சியாளர் நீக்கம்



சம்பியன் டிராபி ஹொக்கி போட்டி பாகிஸ்தானில் உள்ள லாகூர் நகரில் நடந்தது. வெண்கல பதக்கத்துக்கான போட்டியில் இந்திய அணி மீண்டும் பாகிஸ்தானை எதிர் கொண்டது. இதில் இந்தியா 2-3 என்ற கோல் கணக்கில் தோற்று 4-வது இடத்தை பிடித்தது.

சம்பியன் டிராபி போட்டியில் இந்தியா 6 ஆட்டத்தில் விளையாடி ஒன்றில் மட்டுமே வெற்றி பெற்றது. 4 ஆட்டத்தில் தோற்றது.

இந்த தோல்வியால் பயிற்சியாளர் ஜெரார்டு மீது கடும் அதிருப்தி ஏற்பட்டு உள்ளது. தனது பயிற்சி குறித்து இந்திய அரசு அதிருப்தி அடைந்து இருப்பதை ஜெரார்டு ராச் நிருபர்களிடம் தெரிவித்தார்.

ஜேர்மனியைச் சேர்ந்த ராச் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கு முன்பு பயிற்சியாளராக ஒப்பந்தம் செய்யப்பட்டார். ரவீந்தர் சிங் நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக இவர் நியமிக்கப்பட்டார். சாம்பியன் டிராபி போட்டி வரை அவரது ஒப்பந்தம் இருந்தது. ராச்சின் பயிற்சி மகிழ்ச்சி அளிக்கும் வகையில் இல்லாததால் ஒப்பந்தம் நீட்டிக்கப்படவில்லை. அவர் நீக்கப்படுகிறார்.

ராச் பயிற்சியாளராக இருந்த எதன்ஸ் ஒலிம்பிக்கில் இந்தியா 7-வது இடத்தை பிடித்தது. பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரையும் 2-4 என்ற கணக்கில் இழந்து இருந்தது.

-சம்பியன் ஹொக்கி தொடர்-

## நெதர்லாந்தை வீழ்த்தியது ஸ்பெயின் தொடர் வெற்றிக்கும் ஆப்பு வைத்தது



சம்பியன்ஸ்ஹொக்கி தொடரில் ஸ்பெயின் அணி நெதர்லாந்தை வீழ்த்தி முதல் முறையாக கோப்பையை கைப்பற்றியது. தொடர்ந்து மூன்றாவது முறையாக பட்டம் வெல்லும் நெதர்லாந்தின் கனவு தகர்ந்தது.

பாகிஸ்தானில் உள்ள லாகூரில் 6 நாடுகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் டிராபிஹொக்கி தொடர் நடந்தது. இதில் நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணி நெதர்லாந்தை சந்தித்தது. நடப்பு சம்பியனாக வந்த நெதர்லாந்து எளிதான வெற்றி பெறும் என்றே கணிக்கப்பட்டது. அதே நேரத்தில் லீக் தொடரில் நெதர்லாந்திடம் சந்தித்த தோல்விக்கு பழிவாங்க காத்திருந்தது ஸ்பெயின் இப்படி இரு அணிகளுமே ஒரு 'முடிவோடு' களமிறங்கியதால் ஆட்டம் தொடக்கத்தில் இருந்தே விறுவிறுப்பாக இருந்தது.

முதல் பாதியில் ஸ்பெயினின் கையே ஓங்கியிருந்தது இந்த அணிக்கு 18 ஆவது நிமிடத்தில் ஒரு பெனால்டி கோர்னர் வாய்ப்பு கிடைத்தது. இதைப் பயன்படுத்தி பாவ் குயிமேதா துல்லியமாக கோல் அடிக்க ஸ்பெயின் 1-0 என்றே கோல் முன்னிலை பெற்றது. இதற்கு பதிலடி கொடுக்க நெதர்லாந்து வீரர்கள் கடுமையாக முயற்சித்தனர். ஆனாலும் ஸ்பெயினின் தற்காப்பு பகுதியை அவ்வளவு எளிதில் தகர்க்க முடியவில்லை. இதனால் முதல் பாதியின் முடிவில் ஸ்பெயினின் முன்னிலையில் எதுவும் மாற்றம் ஏற்படவில்லை. அதுவே வெற்றிக் கோலாகவும் அமைந்தது.

## வீதி விபத்தில் பாகிஸ்தான் வீரர்கள் அறுவர் காயம்

லூதியானா அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பாகிஸ்தானைச் சேர்ந்த பேட்மின்டன் வீரர்கள் ஆறு பேர் காயம் அடைந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை இந்த விபத்து நடந்தது பஞ்சாபில் நடந்த இந்தியா-பாக் பஞ்சாப் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டுவிட்டு அவர்கள் லாகூருக்கு பஸ்ஸில் திரும்பினர். லூதியானா அருகே அந்த பஸ் கட்டுப்பாட்டை இழந்து சாலையின் மத்தியில் எழுப்பியுள்ள தடுப்பை இடித்து தலைகுப்புறக் கவிழ்ந்தது. காயம் அடைந்த ஆறு வீரர்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிசார் தெரிவித்தனர்.

# விளையாட்டு

## இரட்டைச் சதம் பெற்ற இந்திய வீரர்கள்

வங்காளதேசத்துக்கு எதிராக டாக்காவில் நடைபெற்று முடிந்த முதல் டெஸ்ட் போட்டியில் டெண்டுல்கர் சிறப்பாக விளையாடி 'இரட்டை சதம்' அடித்தார் அவரது 4-ஆ வது இரட்டை சதம் இதுவாகும். இதன் மூலம் அவர் கவாஸ்கரின் இரட்டை சதம் சாதனையை சமன் செய்தார்.ராவிட் 5 இரட்டை சதம் அடித்து முதல் இடத்தில் உள்ளார். அவருக்கு அடுத்தபடியாக டெண்டுல்கர், கவாஸ்கர் ஆகியோர் தலா 4 இரட்டைசதம் அடித்து ள்ளனர்.

இந்திய வீரர்களின் இரட்டை சதம் அடித்த வீரர்கள் விபரம் வருமாறு:-

வீரர்கள் ஆண்டு எதிரான நாடு இடம் இரட்டைசதம்

ராவிட் 2004 பாகிஸ்தான் ராவல்பிண்டி 270

ராவிட் 2003 அவுஸ்திரேலியா அடிலெய்ட் 233

ராவிட் 2003 நியூசிலாந்து அகமதாபாத் 222

ராவிட் 2002 இங்கிலாந்து ஓவல் 217

ராவிட் 2000 சிம்பாப்வே டில்லி 200*

டெண்டுல்கர் 2004 வங்களாதேசம் டாக்கா 248*

டெண்டுல்கர் 2004 அவுஸ்திரேலியா சிட்னி 241*

டெண்டுல்கர் 1999 நியூசிலாந்து அகமதாபாத் 217

டெண்டுல்கர் 2000 சிம்பாப்வே நாக்பூர் 201*

கவாஸ்கர் 1983 மேற்கு இந்தியத்தீவு சென்னை 236*

கவாஸ்கர் 1979 இங்கிலாந்து ஓவல் 221

கவாஸ்கர் 1970 மேற்கு இந்தியத்தீவு போர்ட் ஆப் ஸ்பெயின் 220

கவாஸ்கர் 1978 மேற்கு இந்தியத்தீவு மும்பை 205

மன்காட் 1955 நியூசிலாந்து சென்னை 231

மன்காட் 1955 நியூசிலாந்து மும்பை 223

காம்பிளி 1992 சிம்பாப்வே டில்லி 227

காம்பிளி 1993 இங்கிலாந்து மும்பை 224

சர்தேசாய் 1970 மேற்கு இந்தியத்தீவு கிங்ஸ்டன் 212

சர்தேசாய் 1964 நியூசிலாந்து மும்பை 200

லட்சுமண் 2000 அவுஸ்திரேலியா கொல்கத்தா 281

உம்ரிகர் 1955 நியூசிலாந்து ஐதராபாத் 223

விஸ்வநாத 1981 இங்கிலாந்து சென்னை 222

மஞ்ரேக்கர் 1989 பாகிஸ்தான் லாகூர் 218


ரவிசாஸ்திரி 1991 அவுஸ்திரேலியா சிட்னி 206

பட்டோடி 1963 இங்கிலாந்து டில்லி 203*

கெய்க்வாட் 1983 பாகிஸ்தான் ஜலந்தர் 201

சித்து 1996 மேற்கு இந்தியத்தீவு டிரினிடட் 201

## சிந்தனைக்கு



உண்மையில் எமது மக்களின் பாரிய உயிரிழப்பிற்கும் அவர்களின் உடைமை நாசத்திற்கும், சிங்கள ஆளும் வ்க்கத்தின் இனவெறிபிடித்த தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 14-12-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham, com


## பௌத்தர்களின் 'கலாச்சாரம்'

சிறிலங்காவில் பௌத்த கலாச்சாரம் எந்தளவிற்கு ஆயுதக் கலாச்சாரமாக மாற்றம் கண்டுள்ளது. என்பதற்கு கொழும்பில் நிகழ்ந்த ஹிந்தி இசைக்கலைஞர்களின் களியாட்ட நிகழ்ச்சியில் நடாத்தப்பட்ட கிரெனைட் தாக்குதலும் –அதில் இருவர் கொல்லப்பட்டமையும் பதினைந்து பேருக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தமையும் சிறப்பானதொரு எடுத்துக்காட்டாகும்.

ஹிந்தி நட்சத்திரங்களின் இசைநிகழ்ச்சி அன்றைய திகதியில் (11 ஆம் திகதி) நடாத்தப்படக் கூடாதென ஏற்கனவே தீவிரவாத பௌத்த அமைப்புக்களினால் எச்சரிக்கப்பட்டிருந்ததென்பது உண்மையே. ஆனால் இவ் எச்சரிக்கையானது ஏற்கனவே நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் பெரும்பாலும் பூர்த்தியடைந்த நிலையிலும், காலகட்டத்திலுமே மேற்கொள்ளப்பட்டதாகும். அதிலும் குறிப்பாக பெருமளவான நுழைவு அனுமதிச் சீட்டுக்கள் விற்றுத்தீர்ந்த பின்னரே இவ்எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த நிலையில் விழா ஏற்பாட்டாளர்களினால் இந்நிகழ்ச்சியை ஒத்திவைப்பதென்பது பெரும்பாலும் சாத்தியப்பாடற்றதொன்று எனக் கருதப்படும் நிலையே இருந்தது. அது மட்டுமல்ல இந்நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் விடுவிக்கப்பட்ட எச்சரிக்கை குறித்து உரிய முறையில் கவனத்தில் கொள்ளவில்லை போலும் தெரிகின்றது. சில வேளை பௌத்த அமைப்புக்களின் கலாச்சாரம் மாற்றம் கண்டிருப்பதை அவர்கள் உணர்த்த வந்த காரணமாக இருந்திருக்கலாம்.

இந்நிலையில் விழா ஏற்பாட்டாளர்கள் ஆட்சேபம் தெரிவித்த தரப்பினருக்குத் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திய நிலையில் தமது ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்தினர். இதனைத் தொடர்ந்து ஹிந்தி திரைநட்சத்திரங்களும் வருகை தந்து இசை நிகழ்ச்சியும் நடாத்தப்பட்டது. இந்நிலையிலேயே கைக்குண்டு வீச்சு இடம் பெற்றது.

இதற்கு முன்னதாக இசை நிகழ்ச்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்ட போது பொலிசாரின் தடியடிப்பிரயோகத்தினால் கலைக்கப்பட்டனர். இதில் பௌத்த பிக்குகள் சிலரும் காயங்களுக்கு உள்ளாகினர். இந்நிலையிலேயே குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் இந்நிகழ்ச்சி சந்தேகத்திற்கிடமான முறையில் மரணமான பௌத்த பிக்குவான கங்கொடவில்ல சோம தேரரின் நினைவு நாளில் நடாத்தப்பட்டது சரியா? தப்பா? இந்நிகழ்ச்சியை பிற்போட முடியாது போனமைக்கு கூறப்பட்ட காரணங்கள் ஏற்கத்தக்கவையா? இல்லையா? என்பவையெல்லாம் ஒரு புறம் இருக்க இங்கு முக்கியமான விடயமாக இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்டத் தக்கவையாகும் .

ஒன்று பௌத்த கலாச்சாரம் எந்தளவிற்கு ஆயுத மயப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது வன்முறைக் கலாச்சாரமாக மாறியுள்ளது என்பதாகும். சிறிலங்காவில் இன்று பௌத்தர்கள் எதையும் ஆயுதத்தின் மூலமே தீர்வுகாண முற்பட்டுள்ளனர். இது இனப்பிரச்சினையாக இருக்கலாம். இசை நிகழ்ச்சியாக இருக்கலாம். இன்றைய அவர்களின் நிலைப்பாடு இதுவே.

இதே சமயம் இதற்குக் காரணமானவர்கள் ஆயுதப்படைத்தரப்பாகவும் இருக்கலாம். அரசியல்வாதிகளாகவும் இருக்கலாம். பௌத்த பிக்குகளாகவும் இருக்கலாம். ஏனெனில் அனைவரும் ஆயுதகலாச்சாரத்திற்கு உட்பட்டு விட்டனர். மறுபுறத்தில் ஆயுதம் அவர்களுக்குக் கிடைப்பதற்கான மார்க்கங்களும் இங்கு இலகுவாகிவிட்டது.

அடுத்ததாக இத்தாக்குதலானது இந்திய குறிப்பாக ஹிந்தி நட்சத்திரங்கள் கலந்துகொண்ட நிகழ்வில் நடாத்தப்பட்டதாகும். இதன் மூலம் இந்தியா தொடர்பான பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகள் கொண்டுள்ள நிலைப்பாட்டினை விளங்கிக்கொள்ள முடியும்.

இன்று சிங்கள அரசியல்வாதிகள் அனைவரும் இந்தியாவுடன் நட்புறவைப் பேணுவதற்கே முற்பட்டு நிற்கின்றனர். இந்தியாவின் பரமவைரியாக இருந்த சிலர் கூட இன்று இந்தியாவை திருப்திப்படுத்தும் வகையில் நடந்துகொள்வதிலேயே அக்கறை காட்டுகின்றனர். ஆனால் இவை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளப்படாது விட்டாலும் சிங்களப் பேரினவாத சக்திகள் இந்தியாவை, இந்திய மக்களையேநேச சக்தியாகக் கொள்ளவில்லை. இந்தியாவிற்கு எதிரான உணர்வு அவர்களின் அடிமனங்களில் ஆழவே வேர் ஊன்றிப் போயுள்ளது.

அடி மனதில் உள்ள இவ்வெளிப் பாட்டின் காரணமாகவே இந்திய நட்சத்திரங்களின் நிகழ்விற்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பௌத்த பிக்கு வின் நினைவு நாள் என்பது அதற்கு வாய்ப்பாகக் கிடைத்த காரணியே சிங்கள ஆட்சியாளர்கள் அடிமனத்திலுள்ள முரண் பாட்டை பேச்சுக்கள் மூலம் பூசி மெழுகி விடப்பார்க்கலாம். இந்தி யாவே தனது புவிசார் அரசியற் கொள்கைக்குள் இதனை அமுக்கி விடப்பார்க்கலாம். ஆனால் இந்தியா தொடர்பான பௌத்த சிங் களவரின் மனப்போக்கை உளக்கிடக்கையை மாற்றிவிட முடியாது. அவ்வாறு மாற்றப்படுவதனால் இலங்கைக்கென புதிய வரலாறு ஒன்று எழுதப்பட்டாக வேண்டும்.

# பதவியா? சமாதானமா? என்பதை தீர்மானிக்க முடியாத நிலையில் சந்திரிகா

## இலங்கை ஆசிரியர் சங்க அமைப்பாளர் ரணவீரகே

(திருகோணமலை)

சமாதானமா, பதவியா என்பதை தீர்மானிக்க முடியாத நிலையில் சனாதிபதி இருக்கின்றார். இந்த நிலையில் சமாதானத்தை முன்னெடுக்க வேண்டியதற்கான அழுத்தத்தை யுத்தத்தை எதிர்க்கும் சக்திகள் அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் அமைப்பாளர் பேர்ட்டி ரணவீரகே, திருகோணமலை சென் யோசப் கல்லூரியில் கல்வி ஊழியர்களுக்கான நிலையம் நடத்திய கலந்துரையாடலில் தெரிவித்தார்.

அக்கலந்துரையாடலில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், வடக்கு-கிழக்கு பொது ஆசிரியர் சங்கம் வடக்கு கிழக்கு பட்ட தாரி ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கு பற்றினர். ஆரம்பவுரையை திருமலை மாவட்ட அமைப்பாளர் எஸ்.நந்தகுமார் நிகழ்த்தினார். வரவேற்புரையை இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கச் செயலாளர் அல்ஹாஜ் எம்.அனஸ் ஆற்றினார்.

இலங்கை ஆசிரியர் சங்க அமைப்பாளர் பேர்ட்டி ரணவீரகே பேசும் போது, தமது சங்கம் 1978 இல் காலியில் நடைபெற்ற சம்மேளனக் கூட்டத்தில் தமிழர் களின்சுய நிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டுள்ளது என்று கூறினார்.

பெரும்பாலான சிங்கள மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை. இருபிரதான கட்சிகளும் யுத்தத்தை விரும்பவில்லை. ஜே.வி.பி. மட்டுமே இதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது. சந்திரிகா விரும்பினாலும் ஜே.வி.பி அதற்கு உடன்படாது. சனாதிபதிக்கு இன்று பதவிதான் முக்கியமாகத் தென்படுகிறது. சமாதானமா? பதவியா? என்பதைத் தீர்மானிக்க வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது என்றும் பேர்ட்டி ரணவீரகே தெரிவித்தார்.

சமாதானமும் யுத்தமும் அற்ற சூழ்நிலை நாட்டில் காணப்படுகிறது. தமிழ் மக்கள் அரசியல் தீர்வுடன் கூடிய நிரந்தர சமாதானத்தை எதிர்பார்த்துள்ளனர். ஆனால் சிங்கள மக்கள் அபிவிருத்தியை எதிர்பார்க்கின்றனர். தற்போதைய சமாதானமும் யுத்தமும் அற்ற சூழ்நிலை காரணமாக தென்பகுதி சிங்கள மக்கள் யுத்தத்தை மறந்துவிட்ட நிலைதான் காணப்படுகின்றது என்றும் பேர்ட்டி ரணவீரகே தெரிவித்தார். (25)

## இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஏற்படுத்த ஆசிரியர் சங்கம் வற்புறுத்து

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை ஏற்படுத்தி வடக்கு கிழக்கில் சமாதானத்தை நிலைநாட்டுமாறு சிறிலங்கா சனாதிபதிக்கு வடக்கு கிழக்கு பொது ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.இந்த அறிக்கை தொடர்பில் வடக்கு கிழக்கு ஆசிரியர் சங்கச் செயலாளர் சசிக்குமார் சனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள செய்தியில் நாடு பிளவுபடுவதைத் தடுக்க இடைக்கால தன்னாட்சித் தீர்வு அவசியமானது எனத் தெரிவித்துள்ளார் (32)

# கொழும்பு குதிரைப்பந்தயத்திடல் குண்டு வெடிப்பு இலங்கை - இந்திய உறவை சீர்குலைக்கும்

## சிறிலங்கா சனாதிபதி செயலகம் அறிக்கை

குதிரைப்பந்தய திடலில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை அரசாங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது. இந்தக் குண்டு வெடிப்பு தொடர்பில சனாதிபதி செயலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்தியாவில் இருந்து வருகைதந்து இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களிடம் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் மன்னிப்பு கோருவதாகவும் பாதிப்படைந்தவர்களுக்கும் தமது அனுதாபங்களை தெரிவிப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு அமைதியான தீர்வு ஏற்படுவதை விரும்பாத தீய சக்திகளே நாட்டில் பதற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்தியாவிற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான நல்லுறவை சீர்குலைப்பதற்கும் அரசாங்கம் மீது அவதூறை ஏற்படுத்தவும் பாதாள உலக குழுக்களை பயன்படுத்தி சில அரசியல் சக்திகள் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றுமுன்தினம் மாத்தறையில் கலந்து கொண்டு உரையாற்றிய சனாதிபதி இந்த குண்டு வெடிப்புக்கு ஐக்கிய தேசிய கட்சியே காரணம் என குற்றம்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக் கது.(32)

# சர்வதேச ரீதியாக பௌத்தர்களுக்கு களங்கம் ஏற்படுத்துவோர்க்கு வாய்ப்பு

## குண்டு வெடிப்பு குறித்து ஜே.வி.பி அறிக்கை

(கொழும்பு)

சாருகான் இசைநிகழ்ச்சியின் போது நடை பெற்ற குண்டுத்தாக்குதல் சர்வதேச ரீதியாக பௌத்தர்களின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயல்பவர்களுக்கு ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளதாக ஜே.வி.பி குற்றம் சாட்டியுள்ளது.

இந்த இசைநிகழ்ச்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டத்திற்கு காரணமானவர்கள் அடையாளம் காணப்பட வேண்டும் எனவும் ஜே.வி.பி விடுத்த விசேட செய்தியில் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி விடுத்த அந்த விசேட செய்தியில் மேலும் குறிப்பிடுகையில், அரசியல் காரணங்களால் விரத்தி அடைந்துள்ளவர்கள் யார் என்பது பற்றி நாட்டு மக்கள் அனைவரும் அறிவர்.

தமது குறிக்கோளை எய்து வதற்காக இலங்கையின் பெயரைக் காரணப்படுத்த அவர்கள் முற்பட்டுள்ளனர்.

இந்தச் சதித்திட்டத்திற்கும் காரணமாக இருந்த சகல சக்திகளுக்கெதிராகவும் உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அது தெரிவித்தள்ளது.இது குறித்து விமல் வீரவன்ச கருத்துக்கூறுகையில்; நிகழ்ச்சி நடைபெற்ற போது அனைத்து ஊடகங்களும் அன்றைய நிகழச்சி குறித்த தகவல்களை திரட்டும் நோக்கில் அரங்கில் காத்திருந்தனர்.ஆனால் குறிப்பிட்ட ஒரு ஊடக நிறுவனத்தினர் மட்டும் அரங்கைச் சூழ 10 ஒளிப்பட கருவிகளை பொருத்தி இவ்வாறான வன்முறை ஒன்று இடம் பெறும் என்று காத்திருந்துள்ளனர்.ஏனைய ஊடகவியலாளர்கள் சிந்திக்காத வகையில் குறிப்பிட்ட நிறுவனம் மட்டும் மாறுபட்டு சிந்தித்து தனது ஊடகவியலாளர்களை தயார்நிலையில் வெளியில் வைத்திருந்ததன் பின்னணி என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பியுளளார் (32)

# நுவரெலியா கந்தப்பொலவில் மண்சரிவில் சிக்கி பெண் மரணம்

நுவரெலியா கந்தப்பொல பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மண்சரிவில் 58 வயதுடைய பெண் ஒருவர் மரணமடைந்துள்ளதாகவும் மற்றுமொருவர் காயமடைந்த நிலையில் நுவரெலியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரவு 9 மணியளவில் இடம் பெற்ற மண்சரிவில் வீடொன்றின் சமையலறை முற்றாக மூடிப்போயுள்ளதாகவும் இதனுள் சமையல் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பெண்மணியே மரணமடைந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது கந்தப்பொலப் பகுதியில் தொடர்ச்சியாகக் கடும் மழை பெய்து வருவதாகவும் அந்தப் பகுதியில் மேலும் மண்சரிவு அபாயம் தோன்றியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. நுவரெலியா மாவட்டத்தில் மின்சார விநியோகம் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளதோடு குடிநீர் விநியோகமும் நிறுத்தப்பட்டுள்ள தாகவும் இதனால் இந்தப் பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (32)

# திங்கள் நோர்வேயுடன் சமாதான முயற்சி

# செவ்வாய் இந்தியாவுடன் கூட்டுக் கடற் பயிற்சி

## -அரசின் இரட்டைவேடம் குறித்து அமெரிக்காவில் வாழும் தமிழ் மக்கள் கேள்வி

திங்கட்கிழமை இலங்கை வரும் நோர்வேத் தூதுவர் எரிக் சூல்ஹெய்முடன் சமாதான முயற்சிகள் குறித்துப் பேச்சு நடத்தப் போவதாகக் கூறும் சிறிலங்கா அரசு செவ்வாய்க்கிழமை தனது கடற்படையை இந்தியக் கடற்படையுடன் இணைத்து மேற்குக் கடற் பரப்பில் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முடிவெடுத்துள்ளது.

சமாதானம் என்ற பெயரில் அரசு போடும் இரட்டை வேடத்துக்கு இதைவிட ஒரு உதாரணம் தேவையா? என்று புலம்பெயர்ந்து வாழும் அமெரிக்கத் தமிழ் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

"சமாதான முயற்சிகளில் தமக்கு தீராத அவா உள்ளது போன்ற மாயத் தோற்றப்பாட்டை சர்வதேச சமுகத்துக்கு வெளிக் காட்டிவரும் சிறிலங்கா அரசு, புலிகள் யுத்தத்தை ஆரம்பிக்கப் போகிறார்கள் என்ற பிழையான கருத்தைப்பரப்பி வருகிறது.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர்நாள் உரையை அடுத்து புலிகளின் பகிரங்க அறிவிப்பின் காத்திரத்தை உணர்ந்து உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் தெற்கில் அரசியல் பழிவாங்கலிலும் மறுபுறம் இராணுவ ரீதியில் தமது படைகளை வலுப்படுத்துவதிலும் அரசு இரகசிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. "நோர்வேயின் விசேட தூதுவருடன் அமைதி முயற்சி குறித்துப் பேசுவதற்கு நாள் குறித்த அடுத்த நாளே சண்டைக்கும் தயாராகிவரும் இந்த அரசு தமக்கொரு தீர்வைத்தரும் என்று தமிழ் மக்கள் எந்த உத்தரவாதத்தில் நம்பிக்கை கொள்வது?" இவ்வாறு அவர்கள் மேலும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## புனிதபூமி சிறுவர் இல்ல மாணவரின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல்

புனித பூமி சிறுவர் இல்ல மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

நாளை காலை 9.00 மணிக்கு புனிதபூமி இல்ல வளாகத்தில் நடைபெறவிருக்கும் இக்கலந்துரையாடலில் அனைத்து சிறார்களின் பெற்றோர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு புனித பூமி சிறுவர் இல்ல நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (08)

## அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம்

கிளி/மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் வழமைபோல் நடைபெற மாட்டாது என்பதனையும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 21 ஆம் திகதி நடைபெறுமெனவும்

உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளி.மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

# பெரும் மழை காரணமாக வன்னியில் குளங்கள் வான் பாய்கின்றன

நேற்றைய தினம் பெய்த பெருமழை காரணமாக வன்னிப் பகுதியில் உள்ள நீர்ப்பாசனக் குளங்கள் அனைத்தும் நீர் நிரம்பியுள்ள அதேவேளை மேலதிக நீர் வெளியேறிக் கொண்டிருப்பதாக மாவட்ட நீர்ப்பாசனப் பொறியாலாளர் ந.கந்தசாமி தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவிக்கையில் நீர்ப்பாசனக்குளங்கள் அனைத்தும் நீர் மட்டம் வெகுவாக அதிகாரித்து வருகிறது.



இரணைமடு

நேற்றுக் காலை கணிப்புப்படி அக்கராயன் குளம் மூன்றரை அங்குலமும் கல்மடுக்குளம் 1 அடி 1 அங்குலமும், கரியாலை நாகபடுவான் குளம் 6 அங்குலமும், புதுமுறிப்புக் குளம் 1அடி 5 அங்குலமும், பிரமந்தன் குளம் 6 அங்குலமும், வன்னேரிக்குளம் 2 அங்குலமும், கனகாம்பிகைக்குளம 3அங்குலமும், ஆனைவிழுந்தான்குளம் 1 அடியும் வான் பாய்கிறது இதேவேளை இரணை மடுக்குளத்தின் நீர் மட்டம் வெகுவாக அதிகரித்து வருகிறது. இதனால் அதன்வான் கதவுகள் பதினொன்றும் திறந்துவிடப்பட்டுள்ளன. கதவுகளில் 10 கதவுகள் 3 அடியும் 1 கதவு 2அடியும் திறந்து விடப்பட்டு நீர் வெளியேற்றப் பட்டு வருகிறது

# முத்து ஐயன் கட்டுக் குள நீர்மட்டம் அதிகரிப்பது குறித்து எச்சரிக்கை

முததுஐயன்கட்டுக் குள நீர் மடடம் அதிகரித்திருப்பதால் மக்களை எசசரிக்கையாக இருக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

மேற்படி குளத்தின் நீர் மட்டம் 22 அடியிலிருந்து 22 அடி 10 அங்குலமாக அதிகரித்திருப்பதோடு அபாய வான் கதவுகள் இரண்டு 4 அடி நீர் பாயும் அதேவேளை ஏனைய 8 வான்கதவுகளையும் 10 அங்குலம் நீர்பாய்கிறது. இதனால் பேராறுப் பகுதியை அண்டியதாக குடியிருக்கும் மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் கேட்டுள்ளனர்.

### வான்...

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் - விமானங்களைப் பயன் படுத்தப் புலிகள் தயாரகி வருகிறார்கள் என்பது தற்போது நூறு வீதம் ஊர்ஜிதமாகிவிட்டதெனவும் - தம்மிடம் நவீன ரகராடர் இல்லாததால் வான் புலிகளால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை சமாளிக்கமுடியாது என்றும்

அரசிடம் தெரிவித்திருந்தது. இதனால் சீற்றமடைந்த அரசு சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால வான் புலிகள் விவகாரத்தைச் சுட்டிக்காட்டி நோர்வேக்கும் கண்ககாணிப்புக் குழுவுக்கும் காட்டமான கடிதங்களை அனுப்பியுள்ளார். இதேவேளை, புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் தமது வானூர்திகளுக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை புலிகளிடமிருந்து எழுத்துமூலம் கண்காணிப்புக் குழு பெற்றுத் தரும் வரை தாம் புலிகளின் பிரதேசத்தினுள் பறப்புக்களை மேற்கொள்வதில்லை என்ற நிபந்தனையுடனேயே அமைதி முயற்சிகளுக்கு அனுசரணையாக இதுவரை காலமும் இராஜதந் திரிகளுக்கு சிறிலங்கா விமானப் படை வழங்கிவந்த விமான சேவையை நிறுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது.

### நாட்டுப்பற்றார்..

முன்னதாக நல்லூரிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் மக்கள் அஞ்சலிக்காக அவரது புகழுடம்பு வைக்கப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து ஆறு.திருமுருகன் தலைமையிலான அஞ்சலி நிகழ்வும் இடம் பெற்றது.

யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், தமிழீழ விடுதலைப்புலிகளின் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, தமிழீழ கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் அருள் மாஸ்டர், கல்விப் பணிப்பாளர்களான ப.விக்னேஸ்வரன் மற்றும் திருமதி ரெஜினா இருதயநாதன், தமிழர் ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த பஞ்சலிங்கம், எழுத்தாளர்களான நந்தி, ச.வே.பஞ்சாட்சரம், க.ஜெயசீலன், தென்னிந்தியத் திருச்சபையின் முதல்வர் வணபிதா எஸ்.ஜெபநேசன் உள்ளிட்ட பலர் இறுதி அஞ்சலி உரைகளை ஆற்றினர்.

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குரு மகா சந்நிதானம் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது அஞ்சலி உரைகளும் அங்கு வாசிக்கப்பட்டது.

இதனிடையே நேற்றுக்காலை கிளிநொச்சியிலிருந்து வருகை தந்த கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, அரசியல்துறை துணை பொறுப்பாளர் தி.செம்மணன், யாழ்.மாவட்டமகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி கலைவிழி ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். (27)

### உந்துருளி...

பட்டடுள்ளனர்.

தொடர்ச்சியாக பெய்துவரும் மழையினால் வீதிகள் பலவும் சேதமடைந்துள்ள நிலையில், முகமாலை இராணுவச் சோதனைச் சாவடி மூடப்படும் கால அவகாசத்திற்கு முன்னதாக அதனை அவசரமாகக் கடந்து செல்ல முற்பட்ட வேளையிலேயே விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்ட சடலங்கள் கொடிகாமம் பொலிஸாரூடாக யாழ்.போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் நேற்றிரவு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

விபத்துச் சம்பவத்திற்கு காரணமாக தனியார் பேருந்தும் அதன் சாரதியும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தினில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (27)

### மாவீரர்..

வேளை இறுதித் தீர்வு குறித்தும் பேசப்பட வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டை மாற்ற அரசாங்கம் தயாராக இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நோர்வே விசேட தூதுவரின் இலங்கை விஜயம் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கும் சாத்தியங்களை ஏற்படுத்தப்போவதில்லை என அவ்வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இந்த இழுபறி நிலைக்கு சுமூகமான தீர்வு எதனையும் காணமுடியாத நிலையில் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைவிடப்பாடாமல் இருப்பதற்குரிய நடவடிக்கை சூல்ஹெய்மின் இலங்கை விஜயத்தின் முக்கிய நோக்கம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (32)

### மீள்....

காரிகளையோ, பணியாளர்களையோ உள்ளே செல்ல அவர்கள் அனுமதித்திருக்க வில்லை.

இந்நிலையில் அப்பகுதியில் செயலக அதிகாரிகளின் முறைப்பாட்டின் பேரில் யாழ்.பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் அங்கு வருகைதந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுடன் பேச்சுக்களை நடாத்தினர்.

எனினும் கடந்தவாரமும் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி மேற்கொண்ட மறியல் போராட்டத்தின் போது வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமையாலேயே மீண்டும் மறியலில் ஈடுபட்டிருப்பதாக போராட்டக்காரர்கள் தரப்பினில் கூறப்பட்டது. இந்நிலையில் அங்கு நேரடியாக விஜயம் செய்த யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் போராட்டகாரர்களுடன் பேச்சுக்களை நடாத்தினார். அவரது உறுதிமொழியினையடுத்தும் குறித்த கால அவகாசத்தினுள் மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்க உறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து கோரிக்கைகளையும் காலை 10.30 மணியுடன் போராட்டத்தை மக்கள் விலக்கிக் கொண்டனர். (27)

### வன்னி...

சைக்குத் தோற்றியுள்ளனர். பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையங்களுக்குச் செல்லமுடியாத படி வீதிகளைக் குறுக்கறுத்துப் பாய்ந்ததால் சில பரீட்சை நிலையங்களில் பரீட்சார்த்திகள் சிலர் நேரம் தப்பியே பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். முல்லை.மாவட்டத்தின் பாண்டியன் குளம் துணுக்காய் பிரதேசங்களில் தொடர்ந்து பெய்து வரும் தொடர் மழையினால் மல்லாவி சிவன்கோவில் பகுதியில் இருக்கும் இடம் பெயர்ந்த மக்களின் வாழ்விடங்களில் மழை வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் இடம் பெயரும் நிலையில் இருந்து வருகின்றனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேசம் உட்படப் பல பிரதேசங்களில் மக்களின் இயல்பு நிலை பாதிப்படைந்துள்ளது. குறிப்பாக வள்ளிபுனம் தேவிபுரம் உட்பட பலபகுதிகளில் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். குடிசைகளின் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளன. வீதிகளின் மேலால் வெள்ளம் மூடிப்பாய்வதால் மக்கள் போக்குவரவு செய்வதில் பெரும் இடர்களை எதிர் நோக்குகின்றனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் உறவினர்கள் வீடுகளிலும் பொது இடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். தஞ்சம் புகுந்த மக்களின் வீடுகளின் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளன.இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டதால் வட்டக்கச்சி புளியம்பொக்கணைப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் வெள்ளம் புகுந்துள்ளதுடன் வீதிகளினாலும், குறிப்பாக பரந்தன்-முல்லை வீதியில் புளியம் பொக்கணைப் பகுதியில் உள்ள கோஸ்வே ஊடாக நீர்பாய்ந்து கொண்டிருக்கிறது.

அதுமட்டுமன்றி கிளிநொச்சி நகரப்பகுதியில் உள்ள புடவை அழகுசாதனப்பொருட்கள், நகை மாளிகைகள், உணவகங்கள் உட்பட பலபெருமளவான வியாபார நிலையங்கள் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் பெரும் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். இது இவ்வாறிருக்க கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் ஆண்கள் விடுதியில் மூன்றாவது நோயாளர் விடுதியில் இரண்டரை அடிக்கும் அதிகமான நீர் புகுந்திருந்தது. இதனால் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஆண் நோயாளர் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த 60 நோயாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 28 நோயாளர்கள் கட்டில்களில் இருந்தனர். ஏனையவர்கள் அனைவரும் நிலத்திலிருந்து சிகிச்சை பெற்று வந்தனர். இந்த நிலை காரணமாக வைத்தியசாலையில் இடநெருக்கடி ஏற்பட்டது. வைத்தியசாலையின் பின்புற மதில் சுவர் உடைக்கப்பட்டு வெள்ளம் வெளியேற்றப் பட்டதைத் தொடர்ந்து நிலைமை சுமுக நிலைக்குக் கொண்டுவரப் பட்டது.

தொடர்மழை காரணமாக வன்னிப்பகுதி எங்கிலும் உள்ள நெல்வயல்கள் அனைத்தும் நீரில் மூழ்கி உள்ளன. எங்கும் வெள்ளம் பாய்ந்து கொண்டிருக்கிறது. (24,லோ,தீ,08,25)


## வீரவணக்கம்

மண் மடியில் 06 - 12 - 1936



மனக் குழியில் 11 - 12 - 2004

கடற்புலிகளின் மூத்த உறுப்பினரும்
கடற்தொழிலாளர் சங்க சமாசங்களின் மேலாளருமான

**லெப்.கேணல் மறவன் மாஸ்ரர்**

(எலியாஸ்பிள்ளை ஸ்ரனிஸ்லோஸ்-தாளையடி -வடமராட்சி கிழக்கு)

முதுமைகண்டும் போர்புரிந்தமுழுமைத் தமிழ் புலிமறவா –உம்
உளம் நிறைந்த தமிழீழ மண் உமை இழந்து தவிக்குதையா

செ.இரத்தினம் J.P தலைவர்
முன்னைநாள்முல்லைமாவட்ட
கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
(சி-11030) முல்லைத்தீவு.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.